ஸ்ரீ நரஸிம்ஹ ப்ரியா

1625

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1956
1-5-3
MADRAS

திரு நாராயணன்

1625
1-56

JL
M56.15.3
21026

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் — பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 46
2. ஆழ்வார்தம் க்ருபையான ஹம்ஸமுத்திரை வாழியே 47
[ஸம்பாதகர்]
3. செய்திகள் 49
4. மஹாவீரவைபவம் 53
[ஸ்ரீ. உப. வித்வான், ஸரளகவி, பாதூர், ராகவாசார்ய ஸ்வாமி. வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]
5. ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் 57
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A. B. L. அட்வோகேட், திருச்சி.]
6. சௌசம் 61
[ஸ்ரீ. உப. ஆயுர்வேதரத்நம், பண்டிட், மே. துரைஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்னை.]
7. நற்போதுபோக்கு 63
[ஸ்ரீ. உப. ஒரகடம், கோ, ஸுதர்சனாசார்ய ஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்.]
8. ஆசார்யமஹிமை 66
[ஸ்ரீ. உப. வித்வான், வேளியநல்லூர், வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, வெம்பாக்கம்.]
9. அருள்மாரியை யணைந்த ஆநந்தக்கூத்தன் 68
[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்]
10. ஸ்ரீ அழகியசிங்கரின் தேவப்பெருமாள் மங்களாசாஸனம் 70
ஸ்ரீ. உப. வித்வான், தையார், ஜோஸ்யம், ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம்.]
11. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 74
12. பஞ்சாங்கஸங்க்ரஹம் 77
13. சீவரத்தில் சிங்கவேழ்குன்றத்தான் 78
[ஸ்ரீ. உப. வித்வான், வடுவூர், ராமபத்ராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஆராதகர்.]

—ஃ—

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } மன்மத ௵ பங்குனி ௴ { ஸஞ்சிகை 3

‘𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசர்ஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌦𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

பண்டைக்காலத்துக் கொள்கை ஒற்றுமை. வேற்றுமையில் ஒற்றுமை. பல்வேறு உலகத் தோற்றத்திலும் ஒற்றுமையான பகவத்ஸ்வரூபம்தான் எல்லா வஸ்துக்களிலும் உள்ள உண்மை.

நவீன காலத்தின் கொள்கை வேற்றுமை, பிரிவினை. ஒற்றுமை என்ற கொள்கையின் தலைப்பில் பல்வேறு வேற்றுமைகளேதான் நவீன அடிப்படைகள். இம்மாதிரியான அடிப்படையில் ஏற்படவிருக்கும் கட்டிடங்கள் எம்மாதிரி நிலைத்திருக்கும் என்பதை அறிவாளிகள் நன்குணர்வர்.

பொழி வேற்றுமை, அதன் காரணத்தினால் நாட்டின் திட்டுப்பகுதிகளில் அபிமானம், அதனால் பிறரிடம் அவநம்பிக்கை, வெறுப்பு முதலியவைகள் மலிந்து கிடக்கின்றன.

ஸமீபத்தில்நாட்டின்பரிபாலனஸௌகர்யத்திற்காக செய்ய விரும்பிய ராஜ்ய பிரிவினைக் கொள்கைகளின் காரணமாய் பூசல்களும், த்வேஷங்களும் வெகுவாக மலிந்து கிடக்கின்றன என்பதை நாம் உணர்வோம். ஒரு தனிப்பட்ட மொழியில் அபிமானமும், ஆதரவும் போற்றத்தக்கதாயினும், நாளடைவில் அது பிற மொழியிடம் த்வேஷத்தை உண்டாக்குவதைக் கண்டு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட தாய்மொழி ராஜ்யத்தில் வேறு தாய் மொழியாளர்களுக்கு அதிகாரமும், ஆதிக்கமும், அபிமானமும் இருப்பதை பலர் ஸஹிக்காமல் கிளர்ச்சி செய்வதை நாம் காண்கிறோம்.

மொழிப்பற்று இப்படி மொழிப்பித்தாகி வருகிறது. தாய்மொழி என்று சொல்லப்பட்டுவரும் பேசும் மொழி தவிர இதர மொழிகளிலும் அபிமானம் உள்ளவர்கள் கூட த்வேஷத்துக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அவர்கள் விரும்பப்படுவதில்லை.

நவீன உலகில் இம்மாதிரியான வேற்றுமை காரணமாய்த் தோன்றியுள்ள பல்வேறு ராஜ்ய அமைப்புக்களினால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள், அரிசியல் அறிஞர்கள் நன்கு உணர்கிறார்கள். ஆகவே அவர்கள் உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளிடையே ஸமாதானத்தை நிலைநாட்ட வேண்டி பொது ஸ்தாபனங்களை ஏற்படுத்தியும், அதன் மூலம் பொது நன்மைகளைப் பெறவும் முயற்சி செய்வதையும் நாம் அறிவோம். அப்படி இருக்க ஒரு சிலர் மட்டில் தனித்து வாழவும். நாட்டின் அரசியல் அமைப்பில் கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டும். இருக்க ஆசைப்படுவதும் மிகவும் விந்தையே.

அரசியல் விஷயங்களைப்பற்றி நாம் அவ்வளவு கவலை கொள்ளவில்லை. ஆனால் இம்மாதிரியான தனிப்பட்ட அரசியல் கொள்கை நமது மதத்துக்கும், தர்மாநுஷ்டானங்களுக்கும் தீங்கு விளைவிக்குமோ என பயப்படுகிறோம். அதனாலேயே தான் இம்மாதிரியான உண்மைகளை எடுத்துரைக்க முன் வருகிறோம்.

மொழிப்பற்றும் அந்த ராஜ்யப்பற்றும் முடிவில் பிறமொழி த்வேஷத்தையும் அந்த ராஜ்

யத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட சாரரிடம் த்வேஷத்தையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. நாட்டின் ஒற்றுமையிலும், அபிவிருத்தியிலும் அபிமானமுள்ளவர்கள் இக்காலத்தில் ஸர்வ ஜாக்ரதையுடன் இருந்து மேலே கூறப்பட்டுள்ள விஷவித்துக்கள் முளைத்து, செடி, கொடி, மரங்களாகாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியம்.

இம்மொழிப்பற்று இத்துடன் நிற்பதில்லை. ஆரம்ப பள்ளிக்கூடம் முதல், உயர்தரக் கல்லூரி முடிய உள்ள பாட திட்டங்களிலும் கூட தாய்மொழியே இடம் பெற்றிருக்கவேண்டும் என்றும், ஸமீபகாலத்தில் ஏற்பட்ட வாஸனுபலத்தினாலும், நவீன நலன்களினாலும் ஆங்கிலம் தவிர இதர மொழிகள் வேண்டியதேயில்லை என்றும் கூட புதுப் புதுக்கொள்கைகள் உருப்பெற்று வருகின்றன.

கல்விமான்களில் பலர் பலமொழிகளைப் படித்தல் அவசியம் என்று கூறிவருவதை நாம் கேட்கிறோம்.

கல்வித்திட்டங்களில் பல புது விதமான மாறுதல்களை அரசாங்கங்கள் செய்யவிருக்கின்றன. இது ஸமயம் அறிவாளிகள் தங்கள் தங்கள் கருத்துக்களை தெளிவு படுத்தி ஆவன செய்யவேண்டும். நம் நாட்டுப் பண்புக்கும், பெருமைக்கும் காரணமான ஸம்ஸ்க்ருதம் பாடதிட்டத்தில் தகுதியான இடம் பெறுதல் அவசியம் என்பதை பலரும் வற்புறுத்த வேண்டும். இதுவே முக்யமான ஸமயம்.

தவிரவும் ஆத்மீக வளர்ச்சிக்கும், குணப்விருத்திக்கும் முக்கியமான நீதிபோதனைகளுக்கு பாடதிட்டத்தில் இடம் இருக்கவேண்டும். அப்படிக்கின்றி சாதாரண மொழிப்பாடங்களிலேயே நீதிபோதனை குழந்தைகளுக்கு ஏற்பட்டுவிடும் எனக்கூறுவது மிகவும் பொருத்தமற்ற விஷயம்.

நவீன காலத்தவர் அறிவு வளர்ச்சியோடு கூட சரீர உழைப்புக்கும் பாட திட்டத்தில் இடமளிக்கவேண்டும் எனக்கூறுவது உண்மையே. அதே போல் ஆத்மீக வளர்ச்சிக்கும் அதன் மூலம் ஸமூஹ முன்னேற்றத்துக்கும் வசதி ஏற்படும்படி கீழ் வகுப்புகளிலேயே பாடதிட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அதேபோல் பண்டைபண்புகளைப் பரிபாலிக்கவும் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் நம் நாட்டின் புராதன பண்பும், கலாசாரமும், ஆன்மீக வளர்ச்சியும், அதன் மூலம் பெருமையும், அமைதியும் நிலவும். ஸந்துஷ்டியும் உண்டாகும். உலகுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதோடு உலக க்ஷேமத்துக்கும் பாடுபடமுடியும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆழ்வார்நம் க்ருபையான ஹம்ஸமுத்திரை வாழியே

'வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான் தக்க சீர்ச் சடகோபன்' என்று ஆழ்வார் அநுஸந்தானம் செய்வது போலவே, வேதத்தின் உட் கருத்துக்களை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்துரைத்தனர்.

"சேம நல் வீடும் பொருளும் தருமமும், சீரிய நற்காமமும் என்றிவை நான்கென்பர், நான்கினும் கண்ணனுக்கே ஆவது காமம், அறம் பொருள் வீடிதற் கென்றுரைத்தான் வாமனன் சீலன், இராமாநுசன்" என்றபடி பகவத் பக்திக்காகவே ஏற்பட்டவை அறம் பொருள் இவைகள்.

"ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ — அஹம் த்வா ......மோக்ஷயிஷ்யாமி..." என்று பார்த்தனுக்குபதேசித்தான் கண்ணன்.

தர்மார்த்தகாம மோக்ஷங்களுள் மோக்ஷமே

பரம புருஷார்த்தம் என்பதும் அதை அடைவது பகவானிடம் ப்ரபத்தி செய்து கொள்வதினால் என்பதும்தான் மேலே கூறப்பட்டவைகளின் கருத்துக்கள். இவைகள் தான் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம். இம்மாதிரியான அஸாதர்ரணமான கருத்துக்களே நமது ஸித்தாந்தத்தை உலகில் உயர்ந்த ஸித்தாந்தமாக்குகிறது.

சுருக்கமாகக் கூறினால் இதுதான் உண்மை. உலகம் உண்மை. அது அநித்யம். மோக்ஷமே நித்யம். அதை அடைவதே நமது பரம புருஷார்த்தம். அதை அடைவதற்கு பரம புருஷனான ஸ்ரீமந்நாராயணனை சரணாகதி அடைவதுதான் வழி இவ்வுண்மைகளைத்தான் வேதங்கள், புராணங்கள், ஆழ்வார் ஆசார்ய ஸூக்திகள் முதலியவைகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

இவ்வுண்மையை நமக்கு எடுத்துரைத்தவர்களும், அதையே அநுஷ்டித்துக் காட்டியவர்களும், நமக்கு ஜ்ஞானபிதாக்கள்.

இவ்வுபதேசத்தைத்தான் உலகில் மிகவும் போற்றப்படும் ஸ்ரீபகவத் கீதையில் காண்கிறோம். அர்ஜுனனாகிய சேதனனுக்கு கண்ணனாகிய பரமாத்மா இவ்வுண்மையை உபதேசிக்கிறான். அநித்யமான உலகப்பற்றை விட்டு நாம் என்பதையும் மறந்து, பகவத் கிங்கரன் என்ற பாவங்கொண்டு, நம்முடைய வஸ்துக்கள் என்ற எண்ணத்தை விலக்கி, பகவத்கைங்கர்யோபயுக்தங்களாகிய ஸாதனங்கள் எனக்கொண்டு, நம்மைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஸ்ரீமந்நாராயணனுக்கே என்ற பாவம் உண்டாகவேண்டும் என்பதுதான் அவ்வுபதேசித்தின் நோக்கு. அந்த உபதேசத்தைச் செய்தருளியவன் கண்ணன். உபதேசம் செய்யப்பட்ட விடம் தேர்த்தட்டு.

பாண்டவ கௌரவ ஸைன்யங்கள் சண்டை செய்யும் நோக்குடன் கூடியிருந்த காலத்தில் ரதாரூடனான அர்ஜுனனுக்கு, பார்த்தஸாரதி உபதேசிக்கின்றான். அரசர்களுக்கு அடையாளமான த்வஜமும் ரதத்தில் பொருத்தப்பட்டிருந்தது. அர்ஜுனனின் த்வஜ சின்னம் "ஹநுமான்." விஷ்ணுவுக்கு த்வஜ சின்னம் எப்படி கருடனோ அதேபோல் அர்ஜுனனுக்கு "ஹநுமான்" இன்றியமையாதது. இம்மாதிரி சந்தர்பத்திலும் இடத்திலும் தான் சரணாகதி சாஸ்த்ரம் உதித்தது.

இவ்வுயர்ந்த சாஸ்த்ரத்தை அநுஷ்டித்துக் காட்டியவர்தான் நம்மாழ்வார். ஶாஸ்த்ரோபதேசத்தின் பெருமை கண்ணனைச் சேருவது போல், ஶரணாகதி சாஸ்த்ராநுஷ்டானத்தின் பெருமை நம்மாழ்வாரைச் சேரும். "அடியேனைப் பொருளாக்கி உன் பொன்னடிக் கீழ்ப் புகவைப்பாய்" என்று அநுஸந்தித்தார் ஆழ்வார். "அலர்மேல் மங்கையுறைமார்பா...திருவேங்கடத்தானே...புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று நாம் செய்யவேண்டிய முறையை எடுத்துக் கூறினார். ஆழ்வார் ஹம்ஸத்வஜர் ஆகவே ஆழ்வாருடைய அடையாளம் ஹம்ஸமாகும்.

ஸ்ரீமதஹோபிலமடம் ஸுமார் 600 வருஷங்களுக்கு முன்பு தோன்றி ஸ்ரீமத் வேத மார்க்கத்தைப் ப்ரகாசப்படுத்தி வருகிறது. ஸ்ரீமதஹோபில மடத்தில் மூர்த்தாபிஷிக்தர்களாகிய ஸ்ரீ அழகிய சிங்கர்கள் பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களும், உபயவேதாந்தத் ப்ரவர்த்தகர்களும் ஆகிறார்கள். உபயவேதாந்தமாவது ஸம்ஸ்க்ருத, த்ராவிட வேதங்கள். உபய வேதாந்தத்தின் ஸாரமாவது ஸ்ரீமந்நாராயணனைச் சரணாகதி செய்து மோக்ஷத்தைப் பெறவேணும் என்பதுவே.

ஶரணாகதி ஶாஸ்த்ரோத்பத்திக்குக் காரணமான ஹநுமத்வஜனாகிய அர்ஜுனனும், ஶரணாகதி ஶாஸ்த்ராநுஷ்டாதாவாகிய ஹம்ஸத்வஜராகிய (நம்) ஆழ்வாரும், நம்மால் எக்காலத்திலும் மறக்க முடியாதவர்கள். இம்மாதிரியான ஶாஸ்த்ர ப்ரவசனத்துக்காகவே ஏற்பட்டது ஸ்ரீமதஹோபில மடமும், அதில்

மூர்த்தாபிஷிக்தர்களாகிய ஸ்ரீமதழகிய சிங்கர்களும். ஆகவே ஶரணாகதி ஶாஸ்த்ரப்ரவர்த்தனத்துக்கு இருப்பிடமான ரதத்தில் காணப்பட்ட ஹநுமத்வஜத்தின் சின்னமும், ஶரணாகதி ஶாஸ்த்ராப்யாஸத்துக்கு இருப்பிடமான ஆழ்வாரின் முத்ரையான ஹம்ஸமும், நமது ஸ்ரீமதழகிய சிங்கர்களுக்கு விசேஷமான முத்ரைகளாகின்றன.

உலகில் உள்ள நம் போன்ற சிஷ்யர்களுக்கு ஶரணாகதி ஶாஸ்த்ரத்தை உபதேசிப்பதும், அவர்களை அநுஷ்டிக்கும்படி செய்வதும் போன்ற பேருபகாரத்தைச் செய்து வருபவர்கள் ஸ்ரீமதழகிய சிங்கர்கள்.

“அகலாமே மாறனுறை யருத்தமுடனனை வருக்கும் தகவாலேயுரைக்கின்ற தன்மையுள்ள மாமுனியை” என்றபடி ஆழ்வாரின் கருத்தை உள்ளபடி உறைப்பவர்தான் எத்திசையுமேத்த நின்ற சடகோபன். ஸ்ரீவண் சடகோபர் என்பது அஸாதாரணமான திருநாமம் நமது ஸ்ரீமதழகிய சிங்கர்களுக்கென்று ஏற்பட்டது. அதனாலேயே இன்றும் கூட ஸ்ரீமதழகியசிங்கர் ‘ஸ்ரீசடகோபஸ்ரீ:’ என்றே திருவக்ஷரம் சாத்துவது வழக்கமாயிருந்து வருகிறது. அதுபோலவே ஸ்ரீமதழகிய சிங்கரின் முத்ரையுங்கூட ஹம்ஸம், ஹநுமான் என்ற இரண்டு அடையாளங்களைக்கொண்டதாக இருக்கிறது.

ஆழ்வாரின் சின்னம் ஹம்ஸம் மட்டில்தான். ஶரணாகதி ஶாஸ்த்ரப்ரவ்ருத்தி காலத்தில் தேர்த்தட்டில் இருந்தது ஹநுமான் மட்டில்தான். ஆனால் நமது ஸ்ரீமதழகிய சிங்கர்களின் முத்ரையிலோ இரண்டு சின்னங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஸ்ரீமதழகிய சிங்கர் ஶரணாகதி ஶாஸ்த்ரோபதேஷ்டாவாகிய ஸ்ரீகண்ணனின் அவதாரமாகையாலும், ஶரணாகதி ஶாஸ்த்ராநுஷ்டாதாவாகிய ஆழ்வாரின் அவதாரமாகையாலும் இரண்டு சின்னங்களையும் சேர்த்தே ஓர் முத்ரையை ஸ்வீகரித்தாயிருக்கிறது. என்னே நமது ஸ்ரீமதழகிய சிங்கரின் மஹிமை.

[இந்த முத்திரைதான் இவ்விளக்கத்தின் முகப்பில் காணப்படுகிறது. இதுதான் ஸ்ரீமதழகிய சிங்கரின் ஸநாதனமுத்ரை]

—*—

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை மேல மாம்பலம்

ஷை பாடசாலையில் ஸ்ரீ மாலோல சபையினுதவில் 17-12-55சனிக்கிழமை மாலை 3-30-மணிக்கு இப்பாடசாலையின் பழைய தலைமை ஆசிரியர் ஸ்ரீ. உ. வே. எஸ் ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமியின் தலைமையில் கூடியது. அச்சமயம் ‘கல்விச் செல்வம் பெரியதா, பொருட் செல்வம் பெரியதா’ என்னும் விஷயம்பற்றிப் பேசப்பட்டது. வித்யார்த்திகளில் சிலர் மேற்கூறிய விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். பின்னர் ஸ்ரீ. உ. வே. எ. டி. கல்யாணவரதாச்சாரியார் ஸ்வாமி (தமிழாசிரியர்) மேற்கூறிய விஷயத்தைப்பற்றி தக்கசான்றுகளுடன் உதாஹரணமாக ஓர் கதையையும் கூறி விளக்கமாக உபந்யஸித்தார். பின்னர் மாணவர்கள் தைர்யமாக சபைகளில் பேசவேண்டுமென்றும், சிறுவயதில் பழகினால்தான் பின்னால் வயது வந்த பின் பெருங்கூட்டங்களில் பேச இயலுமென்றும், எனவே, மாணவர் அனைவரும் அடுத்த கூட்டத்திலிருந்து பேச முயலவேண்டுமென்றும், ஊக்கமளித்துப் பேசி தமது உபந்யாஸத்தை முடித்தார்.

பிறகு தலைவர் தமது சொற்பொழிவில் அனேக சிறந்த உதாஹரணங்களையும், கதைகளையும் கூறி அதன் மூலம் கல்விச் செல்வத்

தின் பெருமையை விளக்கினார். மாணவர்கள் உற்சாகமாகக் கற்றால் எல்லாவிதமான நன்மைகளையும் பெறலாம் என்று கூறினார். பிறகு கார்யதர்சி வந்தனோபசாரங்கூற, மங்களகீதம் பாடப்பட்டு சபை இனிது முடிவடைந்தது

ஷை பாடசாலையில் 21-12-55 புதன் கிழமை மாலை ஆசிரியர்களும், மாணவர்களும் கூடி ஸ்ரீ அஹோபிலமடம் 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரவைபவத்தைக் கொண்டாடினார்கள். ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை ப்ரதானாத்யக்ஷர் ஸ்ரீ. உ. வே ஐ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸ்வாமி தலைமை வகித்துப் பேசினார். அவர் ஸ்ரீமதழகியசிங்கரின் அஸாதாரணமான குணாதிசயங்களை பல உதாஹரணங்களுடன் எடுத்துக் காட்டினார்.

ஷை பாடசாலையில் ஸ்ரீ மாலோசபையின் கூட்டம் 21–1–56 சனிக்கிழமை மாலை 3-30-மணிக்கு மா. ஸ்ரீ. எஸ். ஜகன்னாதய்யர் அவர்கள் தலைமையில் கூடியது. மாணவர்கள் ஸ்தோத்திரம் பாடியவுடன் காரியதரிசி அறிக்கை வாசித்தான். பின்னர் தலைமையாசிரியர் தலைவருக்கு வரவேற்புக் கூறி, அவரைப்பற்றி சில வார்த்தைகள் சொன்னார். 'அன்பு' என்னும் விஷயம்பற்றி சில மாணவர்கள் தகுந்த கதைகளுடன் விளக்கிப் பேசினார்கள். பிறகு நமது பாடசாலை மாணவர்களில் ஒருவனான பி. ஸி. ராமானுஜம் என்பவனின் சகோதரன் தானும் பேச விரும்புவதாக தலைமையாசிரியரிடம் கூறி அனுமதி பெற்று வெகு அழகாக பல மேற்கோள் கதைகளுடன் விஷயத்தை விளக்கிப் பேசினான். பிறகு தலைவர் பேசியதின் ஸாரம் வருமாறு:— 'அன்பு' என்பதை கடையில் விலைக்கு வாங்க முடியாது மனதில் ஏற்படும் ஆழ்ந்த சிந்தனைதான் 'அன்பு' எனப்படும். இது பிறவியிலேயே தோன்றும் குணம். அன்பு பாராட்டுதல் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கென ஏற்பட்டதல்ல. வீடு, பாடசாலை, பொதுஸ்தாபனங்கள் யாவற்றிலும், இது பாவி வளர இடமுண்டு. தேசந்தோறும், உலகமெங்கும் அன்பு பாவினால் உலகில் சண்டையே ஏற்படாது. மனதில் விரோதபாவமே எழக்கூடாது. மேலும் அன்பை படிப்பு விஷயத்திலும் மாணவர்கள் காட்டவேண்டும். எப்படியெனில் தாங்கள் கற்றுவரும் பாஷைகளை அதிகமாக மதித்துப் பாராட்டவேண்டும். அதிலும் ஸம்ஸ்க்ருதபாஷையில் விசேஷ ஆதரவு செலுத்த வேண்டும். அதற்குச் சில வழிகள் உள்ளன' என்று கூறி அவற்றையும் விளக்கினார். அதாவது:— அரிய அறவுரைகளை பல பாஷைகளிலும் எழுதி அட்டைகளில் ஒட்டுதல், நமக்குத் தெரிந்த ஸ்தோத்திரங்கள், பாடல்கள் இவைகளுக்கேற்ப சித்திரங்களை எழுதி அவற்றைத் தனித்தனியே ஒட்டி வைத்தல், வார்த்தைப்போட்டி, விடுகதைப்போட்டி இவைகளுக்கேற்ற சொற்களை, பல மொழிகளிலும் எழுதி வைத்தல் முதலிய வேலைகளைச் செய்தால் அறிவு வளர்வதுடன் நமது நேரமும் உத்ஸாஹத்துடனும், மகிழ்ச்சியுடனும் செலவாகும். மாணவர்களிடையே சிநேக மனப்பான்மையும் பரவும் என்று இன்னும் பல அரிய விஷயங்களை மாணவர்களுக்குக் கூறினார். கடைசியில் காரியதரிசி வந்தனோபசாரங்கூற மாணவரிருவர் மங்களகீதம்பாட சபை இனிது முடிந்தது.

ஷை பாடசாலையில் மன்மத வருஷ மார்கழி மீ முதல் தேதி முதல் ஸ்ரீ ஆண்டாள் உத்ஸவ ஆரம்பதினம். நாடெங்கும் ஸ்ரீ ஆண்டாள் வைபவத்தை கொண்டாடுதல் என்னும் தொல் வழியையொட்டி திருப்பாவை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. தினமும் காலையில் ப்ரார்த்தனைக்காக ஏற்பட்ட தசாவதார ஸ்தோத்ரத்துடன் கோதாஸ்துதியையும் மாணவர்களநுஸந்தித்தார்கள். 30–12-56 வெள்ளிக்கிழமை ஸ்ரீ. உ. வே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரியார் ஸ்வாமியினுடைய திருப்பாவை காலக்ஷேபம் நமது பாடசாலையில் நடந்தது. அன்று காலக்ஷேபம் ஆரம்பிக்குமுன் நமது மாணவர்கள் ஸ்ரீ கோதாஸ்துதியை மங்களகரமாகப் பாடினார்கள். மாலையில் திருப்பாவை முப்பது

பாடல்களும் மாணவர்களுக்கு சந்தை சொல்லி வைக்கப்பட்டது. 27-ந்தேதி (மார்கழி) பாடசாலை மூடப்பட்டது. அன்றையதினம் காலையில் ஸ்ரீ கோதாஸ்துதியை மாணவர்கள் இருகோஷ்டியாக அழகாகப் பாடினார்கள். மாலையில் திருப்பாவை 30- பாட்டுக்களையும் இரண்டு கோஷ்டியாக மாணவர்கள் ஸேவா க்ரமப்படி பாடினார்கள். ஸ்தோத்திரம், ப்ரபந்தம் முதலியவைகளில் அவர்கள் காண்பித்த ஊக்கம் போற்றத்தக்கது.

ஓர் விஜ்ஞாபநம்

ஸ்ரீ வாத்ஸ்யவரததேசிக ஸபை

ஷை ஸபையின் 2-வது வார்ஷிகஸபை நாளது துர்முகி ஸு சித்திரை மீ 8உ திருக்குடந்தை ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 12உ (ஐந்தாம்நாள்) ஸ்ரீ நடாதூரம்மாள் திருநக்ஷத்ர தினத்தில் பூர்த்தியடைகிறது. ஷை ஸபையில் ஸ்ரீபாஷ்யம், ச்ருதப்ரகாசிகைகளில் பரீக்ஷை, வாக்யார்த்தம் நடக்கும். ஸபையில் அந்வயிப்பவர்களுக்கு யதோசிதம் ஸம்பாவனை பண்ணப்படும். அவ்வைந்துநாட்களுக்குள் குறிப்பிட்ட அதிகாணத்தை குறிப்பிட்ட வ்ருத்தத்தில் ச்லோகமாகச் செய்து அளிப்பவர்களில் முதன்மையாகத் தேறியவருக்கு விசேஷ ஸம்பாவனை அளிக்கப்படும்.

வில்லூர். ஸ்ரீநிவாஸராகவாசார்யர்.

மதுராந்தகத்தில் ஸ்ரீ அழகியசிங்கர்

ஸம்ஸ்க்ருதகலசாலை அத்யக்ஷர் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸ்வாகதபத்ரிகை ஸமர்ப்பிக்கிறார்.

கலாசாலையில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் ஸ்ரீ அழகியசிங்கரும்

ஸ்ரீ கோதண்டராமன் மங்களாஶாஸநமாகி எழுந்தருளியது

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஜநங்களைக்காப்பவன் என்ற காரணம்பற்றி பரத்வாஜன் என்ற பெயர் கொண்டவன் இம்மஹர்ஷி என்று வேதம் கூறுவதால் இம்முனிவர் பெயரினாலேயே ப்ரஸித்தமானவரென்பதைக்காட்ட 'பரத்வாஜ' என்று கூறப்பட்டது. காண்பவர்களுக்கு ஆச்சரியமளிக்கும் அழகிய முடிகள் கொண்டபடியால் சித்ரகூடம் என்ற பெயர் இம்மலைக்கு ஏற்பட்டது. பூக்களும், பழங்களும் நிரம்பிய மரங்கள், செடிகள் சூழ்ந்திருப்பதாலும் இனியகுரல் கொண்ட மான்களும் பறவைகளும் நிறைந்திருப்பதாலும் மஹர்ஷிகள் வாஸம் செய்வதாலும் புண்யதீர்த்தம் செறிந்திருப்பதாலும் சித்ரகூடமலையின் தாழ்வரை ஸ்ரீ ராமபத்ரனுக்கு மனோஹரமான இடமாய் அமைந்துவிட்டது. சித்ரகூடத்தின் ஒப்பிலா எழிலையேற்கனவே பரத்வாஜர் கூறியிருந்தபடியால் அவ்விடத்தையடைந்த ஸ்ரீ ராமபத்ரன் வநவாஸக்லேசத்தையும் மறந்து எல்லையிலா மகிழ்ச்சியை யடைந்தான். 'ஸுரம்யம் ஆஸாத்யது சித்ரகூடம் நதீஞ்ச தாம் மால்யவதீம் ஸுதீர்த்தாம் । நநந்த ஹ்ருஷ்டோ ம்ருகபக்ஷிஜுஷ்டாம் ஜஹௌ ச து:கம் புரவிப்ரவாஸாத் ॥' என்கிற ஸ்ரீ ராமாயணச்லோகம் இங்கு அநுஸந்திக்கத் தகுந்தது. மிக்க அழகிய சித்ரகூடமலையையும், மிருகங்களும், பக்ஷிகளும், புண்யதீர்த்தமும் செறிந்து அதனருகே பாயும் மால்யவதி என்ற நதியையும் அடைந்து மிகவும் பரமாநந்தமடைந்த ஸ்ரீ ராமபத்ரன் அயோத்தியை விட்டு வெளியேறியதாலுண்டாகும் வருத்தத்தை விட்டொழித்தானென்பது இதன் பொருள். மேலும் 'நராஜ்யாத் ப்ரம்சநம் பத்ரே ந ஸுஹ்ருத்பிர் விநா பவம் । மநோ மே பாததே த்ருஷ்ட்வா ரமணீயமிமம் கிரிம் ॥ நாயோத்யாயை ந ராஜ்யாய ஸ்ப்ருஹயேத் யத் த்வயா ஸஹ । யதீஹ சரதோநேகாஸ் த்வயா ஸார்த்தம் அநிந்திதே ॥ லக்ஷ்மணேந ப்ரவத்ஸ்யாமி ந மாம் சோக: ப்ரதக்ஷ்யதி ।' என்ற ஸ்ரீ ராமபத்ரவாக்யமும் விசேஷித்து அநுஸந்திக்க ப்ராப்தம். மங்களங்களை அளிக்கும் ஸீதாதேவி! ராஜ்யத்தை நழுவவிட்டதாலோ, நண்பர்களை விட்டுப் பிரிந்திருப்பதாலோ என் மனத்தை வருத்தம் பாதிக்கவில்லை. உன்னுடன் அழகிய இம்மலையைக் கண்ட நான் இன்று அயோத்தியையோ ராஜ்யத்தையோ விரும்பவில்லை. மதிப்புக்குரிய ஸீதாதேவி! லக்ஷ்மணன் குற்றேவல் புரியும்படி இங்கு பல வருஷங்கள் நான் உன்னுடன் வஸிப்பேனாகில் எனக்கு வருத்தமே தோன்றாது; என்பதிதன் பொருள். இந்த சூர்ணிகையில் பரத்வாஜசாஸந பரிக்ருஹீத என்றிருப்பதால் பெரியோர்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிதல் என்ற குணமுள்ளவன் ஸ்ரீ ராமபத்ரன் என்பது ஸூசிக்கப்பட்டது.

अनन्यशासनीय! அநந்யசாஸநீய!

பிறரால் நியமநம் செய்ய வொண்ணாத ராமபத்ர! கீழ்சூர்ணிகையில் ஸ்ரீ ராமபத்ரன் சித்ரகூடமலைக்கு எழுந்தருளி அழகிய பர்ணசாலையில் வாஸம் செய்து வந்த வ்ருத்தாந்தம் கூறப்பட்டது. இந்த சூர்ணிகையினால் ஸர்வேச்வரனான அவனை நியமிக்க வல்லவர் யாருமில்லை என்பது கூறப்படுகிறது. இங்கு அறியவேண்டிய ஸ்ரீ ராமாயண கதை வருமாறு:— ஸ்ரீ ராமபத்ரனைத் தொடர்ந்து காட்டுக்குச் சென்ற ஸுமந்த்ரர் கங்கைக் கரையில் ஸ்ரீ ராமபத்ரனால் அயோத்தி செல்லும்படி கட்டளையிடப்பட்டார். ஆயினும் மறுபடியும் ஸ்ரீ ராமபத்ரன் தன்னை யழைப்பானோ என்ற ஆசையினால் பல நாட்கள் சிருங்கிபேரபுரத்தில் குஹ

னிடம் தங்கியிருந்தார். ரஹஸ்ய தூதர்கள் மூலமாக சித்ரகூடமலையில் ஸ்ரீராமபத்ரன் ஸந்தோஷமாக யிருப்பதை யறிந்து அயோத்தி திரும்பினர். அங்கு சக்ரவர்த்தியை அணுகி ஸ்ரீ ராமபத்ரன் காட்டுக்குச் சென்ற விருத்தாந்தத்தையும், அவனைப் பிரிந்த துக்கத்தினால் மரங்கள் உலர்ந்தும், பூக்கள், மொட்டுகள் முதலிய வாடியும் காடுகளிலும், தோட்டங்களிலும் இலைகள் உலர்ந்தும் ஆறு, குளம், குட்டைகளிலுள்ள நீர் வெப்பமுற்றும் காணப்படும் தோற்றத்தையும் கூறி அறிவுடைய அயோத்தி மாந்தரின் வருத்தம் அளவிடற்கரிது என்று சொன்னார். இதைக் கேட்டதும் புத்ரவிரஹ சோகத்தினால் தசரதசக்ரவர்த்தி 'ராகவ! பெருந்தோள் படைத்தவனே! என் சிரமம் தீர்ப்பவனே! என்றிப்படி பலவாறு கதறியழுது ஸ்ரீராமபத்ரனிடம் மனத்தைச்செலுத்தி அமரத்வமடைந்து விட்டார். காலையில் மந்திரிகள் வஸிஷ்டமுனிவரின் அநுமதி பெற்று மாமனிடம் சென்றிருந்த பரதனை வரவழைத்தனர். விஷயமறிந்த பரதனும் அமரத்வமடைந்த தகப்பனாருக்குச் செய்யவேண்டிய சடங்குகளை முடித்தவுடன் ஸ்ரீ ராமபத்ரவிரஹமும், சக்ரவர்த்தி திருநாட்டுக்கெழுந்தருளிய விஷயமும் தன் தாயான கைகேசியின் துராசையினாலுண்டாயின வென்பதை யறிந்து தாய்வேடம் புனைந்து ராஜ்யத்தைக் கவரக் கொடுந்தொழில் செய்யும் எதிரியாக நீ எனக்கு வாய்த்தனை. கணவனைக் கொன்ற பாதகியான உன்னுடன் பேசுவது தகாது' என்றிவ்வாறு பல சொற்களால் தாயைப் பழித்தான். இனி நான் ராமனைத் தொடர்ந்தே செல்லுவேன். மனிதர்களிற் சிறந்த அவனே மூவுலகத்தையும் பரிபாலிக்கச் சக்தி பெற்றவன். காட்டிலிருந்து என் தமயனைத் திருப்ப முயலும் நான் தோல்வி யடைந்து விட்டால் அக்காட்டிலேயே லக்ஷ்மணன் போல் ஸ்ரீ ராமபத்ரனுக்குத் துணைவனாக யிருப்பேன். குணபக்ஷபாதியும் உயரிய சீலமுள்ளவருமான ஸ்ரீ ராமபத்ரன் பக்கலில் சரணாகதியும் செய்திடுவேன்' என்று ப்ரதிஜ்ஞை செய்து கொண்டான். தானும் ஸ்ரீ ராமபத்ரனைப்போல முனிவேடம் தாங்கிப் புறப்பட்டுக் கானகம் சென்று ஸ்ரீ ராமபத்ரனிருப்பிடம் சென்றான். எல்லையில்லா துக்கத்தின் வேகத்தினால் கலங்கிய மனமுள்ள ஸ்ரீ பரதன் சித்ரகூடமலைப் பர்ணசாலையில் ஸ்ரீ ராமபத்ரனைக் கண்டான். உடனே ஸந்தோஷத்தினால் முகமலர்ச்சி கொண்டவனாய் ஸ்ரீ ராமபத்ரனிடம் ஓடி வந்தான். தன்னுடைய ஆர்த்தி தீர அவன் திருவடிகளைப் பற்றவேண்டுமென்னும் ஆசையுடன் ஓடிவந்தும் அழுதுகொண்டே ஸ்ரீ ராமபத்ரனின் திருவடிகளுக்கு முன்புறத்தில் விழுந்து விட்டான். தர்மமறிந்த ஸ்ரீ ராமபத்ர! தங்களை சிரஸ்ஸினால் வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ப்ராணிகளிடம் ஸர்வேச்வரன் அன்பு செலுத்துவதுபோல் தாங்களும் பந்துக்களிடமும், விசேஷமாக அடியேனிடமும் கருணை புரிய வேண்டும். சத்ருக்களற்ற இந்த ராஜ்யத்தின் நிர்வாஹத்தைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதுவே அடியேனுடைய கோரிக்கை. இந்தக் கோரிக்கையைக் கவனிக்காமல் தாங்கள் கானகமே செல்வீராகில் நானும் தங்களுடன் சேர்ந்து கானகத்திலே வாஸம் செய்வேன்' என்று விஜ்ஞாபனம் செய்து ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டினான். தன் கோரிக்கையை ஸ்ரீ ராமபத்ரன் அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிந்ததும் பர்ணசாலைக்கு முன் புறத்தில் தர்ப்பங்களை ஸுமந்த்ரரைக் கொண்டு பரப்பி ப்ராமணன் போல அந்த தர்ப்பங்களில் சயனித்தான். ஸ்ரீ ராமபத்ரன் தன்னிடம் கருணை கொள்ளும் வரை நான் வேறு பொருளைப் பார்க்காமலும், ஆஹாரமுட்கொள்ளாமலும் இந்த தர்ப்பசயனத்திலிருப்பேன் என்று உறு

திப்பாடும் செய்து கொண்டான். இப்படி 'ப்ரதிசயனம்' என்ற விதியினுல் தன்னை யடிக்கடி நிர்பந்திக்கும் பரதனைக் கண்ட ஸ்ரீ ராமபத்ரனும் அவனைத் தன் மடிமேலிருத்தி பரத! சந்திரன் அழகை விடாதிருப்பது போலவும், கடல் கரையை மீருமலிருப்பது போலவும், பனிமலை பனியை விடாமலிருப்பது போலவும் நான் நமது பிதாவினிடம் செய்த ப்ரதிஜ்ஞையை மீற மாட்டேன். ஆகையினுல் வீணுக ப்ரதிசயநவிதிகொண்டு என்னை வருத்தாதே என்று கூறிவிட்டான். உடனே பரதனும் வஸிஷ்டமுனிவரின் அநுமதி பெற்று எல்லா உலகத்திற்கும் யோகக்ஷேமம் பாலிக்கும் பெருமை பெற்றவையும் பொன்னுல் அலங்கரிக்கப்பட்டவையுமான இப்பாதுகைகளைத் தாங்கள் திருவடிகளால் புனிதப் படுத்தி அநுக்ரஹிக்க வேண்டும் எனப் ப்ரார்த்தித்துக் கொண்டான். இதையங்கீகரித்து ஸ்ரீ ராமபத்ரனும் அப்பாதுகைகளைத் தன் திருவடிகளில் சாத்திக் கொண்டு நடந்துசென்று, பிறகு அவைகளை நல்ல மனம்படைத்த பரதனிடமளித்தான். இப்படி பரதனிடம் தன் ப்ரதிநிதியாகக் கொடுத்த பாதுகைகள் மூலமாகத் தன் ப்ரதிஜ்ஞைக்கு விரோதமில்லாமல் ஸர்வலோக யோகக்ஷேமத்தையும் ஸ்ரீ ராமபத்ரன் நிர்வஹித்தான். இப்படி பாதுகைகளை அளிப்பதற்கு முன் ஜாபாலி என்னும் முனிவர் ஸ்ரீ ராமபத்ரனை அணுகி 'ஸ்ரீ ராமபத்ர! நல்ல எண்ணமும், தீரஸ்வபாவமும் கொண்ட நீ ஸாதாரண மனிதனைப் போல பயனற்ற எண்ணம் கொண்டிருப்பது உசிதமல்ல. தமப்பன் என்றும் தாய் என்றும் எண்ணுவது பைத்யமுள்ளவனின் ஸ்வபாவமாகும். பிறக்கும் போதும் மரிக்கும் போதும் ஒவ்வொரு ஜந்துவும் தனித்தேயிருப்பது கண்கூடான விஷயமாகையால் யாருக்கு யார் தாய், யார் தமப்பன்? ஆகையினுல் நீ பித்ருவாக்யபரிபாலநம் செய்வது வீணேயாகும். அயோத்திக்குத் திரும்பி வருவதே பொருத்தமானது என்று பலப்பல கூறியும் ஸ்ரீ ராமபத்ரன் அவர் மொழிகளுக்குச் சிறிதும் இணங்கவில்லை. இதைத்திருவுள்ளம்பற்றித்தான் நம் ஸ்வாமியும் 'அநந்ய சாஸநீய' என்று சூர்ணிகையை யமைத்தருளினர். இங்கு 'ந தஸ்யேசே கச்சந' (அப்பரமனுக்கு நியந்தாவான ஈச்வரன் எவனுமில்லை) என்கிற வேதவாக்யம் ஸ்மரிக்கத்தக்கது. அன்றிக்கே தான் ஸர்வேச்வரனுயினும் ஸ்ரீ ராமபத்ரன் பரத்வாஜமுனிவரின் கட்டளைக்குப் பணிந்து சித்ரகூடமலை சென்றது தானேறிட்டுக் கொண்ட மநுஷ்யபாவனையாலேற்பட்டது. பெரியோர்களின் வார்த்தைக்குக் கீழ்படிதல் உத்தமமானது என்பதை உலகுக்கு உணர்த்துவதற்காகவே அப்படி நடந்து கொண்டான் என்பது கருத்து.

प्रणतभरतमकुटतटघटितपादुकाग्र्याभिषेकनिर्वर्तितसर्वलोकयोगक्षेम!

ப்ரணத பரத மகுடதட கடித பாதுகாக்ர்யாபிஷேக நிர்வர்த்தித ஸர்வலோக யோகக்ஷேம!

ப்ரணத— முடியுடன் வணங்கிய- சரணுகதி செய்த என்றபடி. பரத— தன் ப்ராதாவான பரதனுல், மகுடதட— கிரீடம் வைக்கவேண்டிய இடமான சிரஸ்ஸில், கடித— சேர்க்கப்பட்ட, பாதுகாக்ர்ய— உயரிய பாதுகைகளின், அபிஷேக— ராஜ்யாபிஷேகத்தினுல், நிர்வர்த்தித— உண்டுபண்ணப்பட்ட, ஸர்வலோக— எல்லா உலகத்தினுடைய யோகக்ஷேம— யோகம், க்ஷேமம் இவைகளையுடைய ஸ்ரீ ராமபத்ர!

(கரு) பரதன் ஸ்ரீ ராமபத்ரன் திருவடிகளை வணங்கி சரணாகதி செய்து ஸ்ரீ பாதுகைகளை யளிக்கும்படி வேண்டிக் கொண்டான். ஸ்ரீ ராமபத்ரனும் அவற்றை அவனுக்குப் பூர்ணக்ருபையுடனளித்தார். பரதனும் அப்பாதுகைகளைத் தன் சிரத்தினால் ஏற்றுக் கொண்டு ராஜ்யமடைந்து அங்கு அவைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்தான். ராஜ்ய நிர்வாஹ விஷயங்களை தினந்தோறும் அப்பாதுகைகளிடம் விஜ்ஞாபித்துக்கொண்டு நடத்தி வந்தான். இப்படி ஸ்ரீ ராமபத்ரன் அளித்த பாதுகைகள் ராஜ்யநிர்வாஹத்தை ஏற்று உலகத்திற்கு யோகக்ஷேமங்களைச் செய்து வந்தன. கிடைக்காததைப் பெறுவது யோகமென்றும், பெற்றதைப் பாலிப்பது க்ஷேமமென்றும் கூறப்படும். ப்ருஹஸ்பதிக்கும் மேம்பட்ட புத்திமான்களால் நிர்வஹிக்கவேண்டிய ராஜ்யத்தை அசேதநமான பாதுகைகள் எப்படி நிர்வஹிக்கக் கூடுமென்னில் ஸ்ரீராமபத்ரனின் சரணாரவிந்தஸ்பர்சத்தினால் இப்பாதுகைகளுக்கு இப்படிப்பட்ட மஹிமை ஏற்பட்டது என்றறியவும். கல்லை அழகிய மங்கையாகச்செய்யும் வல்லமை பெற்றவையன்றோ அப்பரமனின் திருப்பாதங்கள். தன் கார்யத்தைச் செய்யும்படி தனக்கொத்தவரை நியமிப்பது உலக இயல்பு. ஸ்ரீ ராமபத்ரனோ இதற்கு மாறாக அசேதநமான பாதுகைகளை நியமித்து ஸர்வலோகத்தின் யோகக்ஷேமத்தையும் நிர்வஹித்தானெனில் என்னே இப்பரமபுருஷனின் மஹிமை என்பது இச்சூர்ணிகையினால் ஸூசிக்கப்படுகிறது. பரதன் செய்த சரணாகதியைப் பாதுகைகளையளித்துப் பயனுள்ளதாக ஸ்ரீ ராமபத்ரன் செய்தான் என்பது இதனால் பெறப்படுகிறது. ஸ்ரீ ராமபத்ரனின் சக்ரவர்த்தி லக்ஷணம் பொருந்திய திருவடிகளை என் சிரத்தினால் தரிக்காதவரையில் என் உள்ளத்தில் சாந்தி நிலவாது என்று ப்ரார்த்தித்த பரதனுக்கு பாதுகைகள் மணிமகுடம் போல விளங்கின. மகுடம் தாங்குவதாலுண்டாகும் உள்ளப் பூரிப்பை உண்டுபண்ணின என்பது 'பரத மகுடதட கடித பாதுகா' என்பதால் ஸூசிக்கப்படுகிறது.

पिशितरुचिविहितदुरितवलमथनतनयबलिभुगनुगतिसरभसशयनतृणशकलपरिपतनभयचकितसकलसुरमुनिबहुमतमहास्त्रसामर्थ्य!

பிசித ருசிவிஹித துரிதவலமதந தநயபலிபுகநுகதி ஸரபஸசயந த்ருணசகல பரிபதந பயசகித ஸகலஸுரமுநி பஹுமத மஹாஸ்த்ர ஸாமர்த்ய!

பிசிதருசி- மாம்ஸத்தில் ஆசையினால், விஹித- செய்யப்பட்ட, துரித- ஜகந்மாதாவான பிராட்டியின் கொங்கையைக் கீறியதென்கிற பாபத்தையுடைய, வலமதநதநய- இந்திரன் புத்ரனை, பலிபுக்- ஜயந்தன் என்கிற காக்கையின், அநுகதி- வதத்துக்காகப் பின்தொடர்ந்து செல்வதில் ஸரபஸ- வேகத்துடன் கூடிய, சயந த்ருணசகல- தர்பப் படுக்கையிலுள்ள சிறு தர்ப்பத்தின், பரிபதந- எங்கு செல்வதினின்றும், பய- பயத்தினால், சகித- பரபரப்புள்ள, பயந்து ஓடிய, ஸகலஸுரமுநி- எல்லாத் தேவர்களாலும், எல்லா முநிவர்களாலும், பஹுமத- கொண்டாடப்பட்ட, மஹாஸ்த்ர- ப்ரஹ்மாஸ்த்ரமென்னும் உயர்ந்த அஸ்த்ரத்தினுடைய, ஸாமர்த்ய- திறனை உடைய ஸ்ரீ ராமபத்ர!

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

மேலும்— இடைவிடாமல், அந்தராத்மாவான ஆநந்தமயஹார்தரை உள்யோக ஸமாதியால் ஆநந்தரஸமாயநுபவிப்பதாலும், பகவதாஜ்ஞைகளை ஹர்ஷத்தோடு அநுஷ்டிக்கும் மர்யாதையை யாவதாயுஷம் காப்பாற்றிவருவதாலும் எனக்கு மோக்ஷரஸஇன்பம் இப்பொழுதே தினமும் கைகூடியே யிருக்கிறதென்னலாம். எனக்கிந்தப்பேறுக்கெல்லாம் மூலகாரணமான விவேகரையும் விஷ்ணுபக்தி தேவியையும் தர்சிக்கவிரும்புகிறேன். துளஸி வநத்தில் வஸிக்கும் த்வாதசியை உபாஸிக்கிறார்கள். இதோ இவர்களை நெருங்குகிறேன்.

(விவேகரும், ஸுமதியும், விஷ்ணுபக்தியும் ப்ரவேசிக்கிறார்கள்)

விஷ்ணுபக்தி:— மஹாராஜரே! பாக்யவசத்தால் சத்ருக்களெல்லாம் உம்மால் ஜயிக்கப்பட்டார்கள்.

யீரொஉாத்தாநுகூலொதாத்தகுண ஶஹிஶா நாயகெஷ்வகுணீக்ஷம் ஸ்வாயீந க்ஷத்ஸநா-யாஸுஶதிரஹிஶதா யஶூவத்நீ தவாஸௌ ।
ஸ்வாயத்தா உாஷ்ய ஸிஜி: ஸஶஜநி ஹவத: ஸ்வாஶி நி:ஶ்ரெயஸாயா ராஶக்ஷம் வ த்ரிலொக்யாம் ரணவிஹாரதிஶுலெ ரவூயரூஷ்யாநுஹாவள ॥

'விவெகஶுவஸ்யநு' என்று முதலங்க ப்ரஸ்தாவனையில் விவேகரை நாயகராக வைத்து நாடகரசனை செய்ததைக் குறித்தார். யீரொஉாத்தாநுகூலொதாத்த குணஶஹிஶா- வ்யஸநங்கள் வந்தாலும் கலங்காதவர் தீரர். தீரரும் கம்பீரரும், அநுகூலரும், உத்தமகுண மஹிமைகளையுமுடைய, க்ஷம்— நீர், நாயகெஷு— நாடகநாயகர்களில், ஶுகுணீ:— ச்ரேஷ்டர், தலைவர். தீரோதாத்தர், தீரோத்ததர், தீரசாந்தர், தீரலளிதர் என்று நான்குவித நாயகர்கள். 'ஶஹாஸகொzதிமஹீர: க்ஷாவாந விகத்தந: । யீரொ நிமூயாஹங்காரொ யீரொஉாத்த: ஸ உஷ்யதெ' என்று ஸாஹித்ய தர்ப்பணங்கூறிய லக்ஷணம். 'அநுகூலரெ'ன்பவர் ஒரே பத்நிக்கு வல்லபராயிருப்பவர். 'உஉாத்தம்' என்பது மனோபாவத்தினாலும், ஐச்வர்யங்களாலும் உந்நதியைக் குறிக்கும். ஶுஸௌஸுஶதி:- இந்த ஸுமதியாகிய, தவ— உம்முடைய, யஶூவத்நீ— தர்மபத்நீ, ஸ்வாயீந க்ஷத்ஸநாயா- அவளுக்கு ஸ்வாதீநனான பதியாகிய உம்மோடு கூடியவள், ஸ்வாதீந பதிகை எனும் நாயகி. விவேகர் பகுபத்நீகராயிரார். ஸ்வாஶி நி:ஶ்ரெயஸாயா- ஸ்வாமியும் தகப்பனுமான புருஷனுடைய மோக்ஷத்தையே ப்ரயோஜநமாக உடைய, ஸிஜி:- கார்யஸித்தி, உாஷ்ய— இப்பொழுது, ஹவத:— உமக்கு, ஸ்வாயத்தா ஸஶஜநி— ஸ்வாயத்தமல்லாமல் உம்மாலேயே ஸாதிக்கப்பட்டதாக ஏற்பட்டது. 'ஸ்வாஶி' என்பது பரமாத்மாவையும் சொல்லலாம். ப்ரயோஜநம் முக்யமாக அவருக்கே. ராஶக்ஷம் வ—ராமனும் நீரும், த்ரிலொக்யாம்—மூன்றுலோகங்களிலும், ரணவிஹாரதிஶுலெ:- யுத்தலீலைகள் முதலியதால், ஶவூயரூஷ்யாநுஹாவள—தடுக்கக்கூடாதமஹிமையையுடையவர்கள். (காவ்ய நாயகர்கள்) 'உஸெஶிரியாநநம் வொரம் யஶநொ ரஜநீவரம் । விவெகஶரஜாஸெந ஶஶம் நயதி யொமிநாஶ ॥' என்கிற ச்லோகம் இங்கே ஸ்வாமி திருவுள்ளத்திலுள்ளது திண்ணம், பத்து இந்த்ரியங்களாகிய தலைகளை யுடைய மனதாகிய ராவண ராக்ஷஸன் 'உவெஶாஉஶ' என்கிற முதலங்க ச்லோகத்தில் இது விவரிக்கப்பட்டது. இப்பொழுது ராவணனெனும் மனோராக்ஷஸன் ஜயிக்கப்பட்டு ஸீதையாகிய சிறையிலடைக்கப்பட்ட ஜீவனை ஸம்ஸார ஸமுத்ரத்தை தாண்டிவித்து

ஆகாசமார்க்கமாய் அயோத்யாபுரிக்கழைத்து வரும் ஸமயம். புதிதாக முளைத்த தலைகள் சேர்த்து வெட்டப்பட்ட ராவணன் தலைகள் 101, காளிய ஸர்ப்பனுடைய தலைகளும் 101.

ராஜா- (விவேகர்) ஹோஹோ- அதிசயித்த ப்ரபாவமுடைய தேவி! இதெல்லாம் உம் அநுக்ரஹத்தால் பிறந்ததே. ‘பக்த்யா த்வநந்யயா’ என்று பகவானே உம் ப்ரபாவத்தாலல்லால் மற்றொருவராலும் பகவானை ஸாக்ஷாத்கரித்து ப்ரவேசிக்க முடியாதென்று பாடியுள்ளார். பக்த்யா து ஶக்ய:- பக்தியாலே மட்டும் என்னை ஸாக்ஷாத்கரிப்பதும் ப்ரவேசிப்பதும் சக்யம். ‘அநந்யயா ஶக்ய:’ வேறொரு ஸாதநத்தாலும் நான் அடைய சக்யனல்ல என்றும் அந்வயம். ‘நாந்ய: பந்தா அயநாய வித்யதே’ என்பதுபோல அநந்யயா- மற்றொன்றையும் நோக்காத, மற்றொன்றையும் கோராத பக்தி. (யோசித்து) இன்னமும் புருஷனை ப்ரக்ருதி விட்டபாடில்லை. இன்னம் இவனுக்கு ஆதி வாஹிக கணங்களின் அந்வயம் வரவில்லை.

ஜ்வலநதிவஸஜ்யோத்ஸ்நா பக்ஷோத்தராயணவத்ஸராந் பவநதபநப்ராஜாபத்யாந் ஶதக்ரதுவருணௌ। ஜலதபவநாநி வீநாதீஶான் ப்ரஜாபதி ஸோமத: த்ரைதி விரஜாம் பரப்ரஹ்மாஸ்தத்: ப்ரபந்நமார்கத: ॥

‘ஜ்வலநதிவஸ’ என்ற ச்லோகம் நிர்யாணதிகார முடிவு ச்லோகம். அடுத்த கதி சிந்தநாதிகாரத்தின் முதல் ச்லோகமிது. இரண்டு க்ரந்தங்களுக்கும் இவ்விரண்டு ச்லோகங்களும் முழுப் பொருத்தமுள்ளன. பெற்ற குழந்தையைப்போல் அங்கே ஸாதித்தது. ப்ரஹ்மநாடிக்கு மூர்த்தந்யநாடி என்று பெயர். இப்படி மூர்த்தந்ய நாடியிலே ப்ரவேசிதனான முமுக்ஷுவை ஸ்தூலசரீரமாகிற ப்ரஹ்மபுரத்தினின்றும் ப்ரஹ்மநாடியாகிற தலைவாசலாலே வத்ஸலனான ஹார்த்தன் வார்த்தை சொல்லக் கற்கிற முக்தனை ராஜகுமாரனை ராஜா எடுத்துக் கொண்டு உலாவுமாப் போலே கொண்டு புறப்பட்டு, தேவயான மார்க்கத்திலே வழி படுத்தி ‘அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்’ என்கிறபடியே தான் ப்ரதானனாய் நடத்தி என்ற அங்க அதிகாரத் தொடக்கத்தை இங்கே நினைக்கவேணும். க்ருதக ப்ரஹ்மபுரத்திலிருந்து ப்ரஹ்மநாடி வாசல் வழியாகப் புறப்பட்டு அக்ருதகப்ரஹ்மபுரத்திற்கு செல்விப்பது’ என்ற பாவம் ஸ்வாமி திருவுள்ளத்திலுள்ளதே. ‘அக்ருதகபுரத்திற்கு என்றதால், கார்யமான சதுர்முக ப்ரஹ்மபுரத்திற்கல்ல என்றும் கருத்து. கார்யமான ப்ரஹ்மலோகத்திற்குத்தான் அர்ச்சிராதி கதிசேர்ப்பிப்பதென்ற கக்ஷி தவிர்க்கப் படுகிறது. பகவானும் கூட அந்தர்யாமியாயிருந்து ஸூக்ஷ்ம சரீரத்தோடு குழந்தையைக் கடத்தி ஆகாசமார்க்கமாய் மேலே செல்கிறார். உயிர் நீங்கின உடலை வாஹகர்கள் (மானவர்கள்) தூக்கிச் செல்வர். காணமற் போயிருந்த ராஜகுமாரனை வீட்டிற்கழைத்து வருகையில் அமானவரான அதிவாஹகர்கள் உத்ஸவ ஸம்ப்ரமமாக அழைத்து வரும் சமத்காரமிது. சூழ் விசும்பில் போல பரமபதம் செல்ல நிர்யாண மேற்படுவதற்கு முன்பே இந்த பரமபத யாத்ரோத்ஸவ மிங்கே பாரிக்கப் படுகிறது. ப்ரக்ருதியைத் தாண்டி அதிவஹநம் செய்விக்கும் தேவர்கள் பேர்களைக்கொண்டு நெருப்பு, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், ஸம்வத்ஸரமென்ற காலங்களாக நினைக்கக் கூடாது. அபிமானி தேவதைகள். கீதையில் கூறிய பேர்களுக்கும் இதுதான் பொருள். ஸூத்ரகாரர் மோக்ஷாத்யாயம் 3-ம் பாதத்தில் இந்த ஆதிவாஹிகர்களைப் பற்றிய ஸந்தேஹங்களைத் தீர்த்தார். 12- ஆதிவாஹிகர். ஆதித்யஸங்க்யை. முதலைந்தைப் பற்றி ஸந்தேஹம் கிடையாது. முதலடியில் அவை ஐந்தும் சேர்த்துப் படிக்கப்பட்டது. ‘ஜ்வலந’ என்று ‘அர்ச்சிஸ்’ என்று ச்ருதி கூறிய அக்நிக்குப் பெயர் வைத்தது மிக்க ரஸம். ‘ததோர்சிராதிநா’ என்கிற ஸூத்ரத்தையும் அது ஸூசிக்கிறது. ‘தஸ்ய ஹைதஸ்ய ஹ்ருதயஸ்யாக்ரம் ப்ரத்யோததே, தேந ப்ரத்யோதேந

ஹஷ ஞூதா நிஷாரேதி' என்கிறபடி கேவல பகவத் க்ருபையால் ஹ்ருதயத்தில் ஓர் ஜ்வலநம் (பளீரென்ற ஜ்ஞாந மின்னல் வெளிச்சம்) கிளம்பி, அதனால் 100- ஹேயநாடிகளைத் தள்ளி ப்ரஹ்மநாடியில் ப்ரவேசிப்பிப்பதையும் ஜ்வலநம்' என்பது வ்யஞ்ஜிக்கிறது. அந்த ஜ்வலநத்தால் நாடியில் நுழைந்து வெளிப் படுகையிலேயே ஜ்வலநரெனுமக்நி கை கொடுக்கிறார். அதற்குமேல் ஸூர்யகராவலம்பியாகச் செல்வதே. ஹ்ருதயத்தின் அக்ரஜ்வலநமாகிய மின்னல் வெளிச்சமான ப்ரத்யோதத்தால் ப்ரஹ்மநாடீ ப்ரவேச நிர்கமநங்கள் உடனே ஜ்வலநரைக்கொண்டு ப்ரயாணத்தொடக்கம். 'வித்யு தென்னும் அமானவ புருஷனோடு அதிவஹநம் முடிந்து ப்ரஹ்மப்ராப்தி வருகிறது. ஜ்யோதிர்மயமான மார்க்கம் (மத்தாப்பு) வெளிச்சங்களோடு புறப்பாடு. 'தானுகந்ததொரு நிலத்திலே வைக்க அபிஷிக்தையான மஹிஷியைப் போல பகுமதனாய்' என்று நிர்யாணாதிகாரத் தொடக்கத்திலுள்ளது. 'காலைப்பிடித்த இவனை கை பிடித்து' என்றவிடத்தில், 'உத்தாய தக்ஷிணே ஹஸ்தே க்ருஹீத்வா' உதர்க்த வாணிக்ரஹணம் ஸாயகேதே' என்று ஸாரப்ரகாசிகை. புதிதாய் பாணிக்ரஹணம் செய்த மஹிஷியை அழைத்துச் செல்லும் ஜாந்வாஸம் போல. இங்கே ஜ்வலநர் மிக சீதளர். சைத்யோபசாரம் செய்பவர். பாணிக்ரஹணம் அக்நிஸாக்ஷியாக. இரண்டாமடியில் முதலில் 'பவநர்' எனும் வாயுவைப் படிப்பது, 'வாயுசப்தோ' விசேஷ விசேஷார்ஹாம்' என்கிற இரண்டாமதிகரண நிர்ணயத்தை ஸூசிப்பது. அங்குள்ளபடி வாயுவை தபநரெனும் சூர்யனுக்கு முன் இங்கே படிப்பது. வாயுவிற்குப் பிறகு ஸூர்யன், சந்த்ரன், வித்யுத் புருஷனாகிய அமானவன் என்ற க்ரமத்தில் ஸந்தேஹமில்லை. அதனால் இந்த நால்வரையும் இந்த அடியில் சேர்த்துப் படித்துளது. அதில் 'க்ஷிர த்யுதி' என்னும் மின்னல் புருஷர் மிக முக்யர். அவர்தான் அமானவர். கடைசிவரையில் முக்யமாய் நடத்தி ப்ரஹ்மத்தினிடம் சேர்ப்பவர். அதனால் அவரைத் தனியாகப் படித்தது. 'தடிதோऽதிவருண ஸம்பந்தாத்' என்று தொடங்கு மதிகரணத்தை அது ஸூசிப்பது. 'யோऽயம் பவதே ஏஷ தேவாநாம் க்ருஹா:' என்று பாஷ்யத்தில் உதாஹரித்த ச்ருதியை ஸூசிப்பதற்காக 'பவந' என்று படித்தது. 12- பேர் எல்லோரும் சேதநர். அசேதநமான காலம் முதலியனவல்ல. 'தத்வாஷ: ஸ: என்பது எல்லோருக்கும் ஒட்டுவது. எல்லோரும் ஆதிவாஹகரான ராஜபுருஷர்கள். ஒருவர் மட்டும் தன் கை ஸ்பர்சத்தால் அமாநவராக்குவதால் அமாநவர் என்று பெயர் பெற்றவர். 'அமாநவர், என்று காரணப் பெயர். 'வருணர்' என்று கூறாமல் 'ஜலதரவதி' என்று படித்தது வித்யுத் புருஷருக்கும் இவருக்கும், ஜலதரமான மேகத்திற்கும், மேகத்திற்குள்ளிருக்கும் அந்தரங்க ஸம்பந்தமுள்ளதற்கும், உள்ள ஸம்பந்தத்தை அடுத்த க்ரப பாடத்திற்கு ஸூத்ரத்தில் ஹேதுவாகக் குறித்ததை ஸூசிக்க' என்று ஸாரஸ்வதிநீ. 'ப்ராலேயாம்சு' என்பதால் பன்னீர் துளிகளை, ஹிமாலயப் பனித் துளிகளை ஜில்லென்று வர்ஷிக்கும் சைத்யோபசாரத்தை ஸூசிப்பது. தைத்திரீய நாராயணநுவாக ந்யாஸ வித்யையில் கடைசி அநுவாகத்தில் 'சந்த்ரமாவின் ஸாயுஜ்யமடைகிறான்' என்று கூறியுள்ளது, இந்த மார்க்கத்தில் 8-வதான நித்ய ஸூரி சந்த்ரனுடைய குளிர்ந்த ஸம்ச்லேஷத்தைக் குறிப்பது என்பதையும் இது ஸூசநம் செய்யும். 'அசிரத்யுதி' என்று மின்னல் புருஷரை முதலில் குறித்துவிட்டு வருண, இந்த்ர, ப்ரஜாபதிகளைப் பின் குறிப்பதால் அவர்கள் முக்யரல்ல, முதல் கூறபபட்டவரே முக்யராயிருந்து ப்ரஹ்மம் சேரும் வரையில் நடத்துபவர், இவர்கள் மூவரும் தனித்தனியே அவர்கூடக் கொஞ்சம் கொஞ்சம் சென்று நின்றுவிடுபவர். இவர்கள் மூவரையும் சாந்தோக்ய உபகோஸலவித்யையில் குறிக்கவில்லை. வித்யுத் புருஷரான அமானவரோடு நின்றுவிட்டது. அவர் ப்ரஹ்மத்தை சேர்ப்பிப்பதை மட்டும் கூறிற்று. ப்ருஹதாரண்யகத்

திலும் அப்படியே. கௌஷீதிகியில் வருண இந்த்ர ப்ரஜாபதிகளைக் கூறியுள்ளது. அதனாலும் இவர்கள் மூவரையும் தனியே 3-வது அடியில்படித்தது 'ஆகத:' என்றெவ்வொரு பதத்தோடும் அந்வயிக்க வேணும். 'ஸ: ஆகச்சதி, ஸ: ஆகச்சதி' என்று திரும்பவும் திரும்பவும் உபநிஷத்துகளில் மார்க்கத்தில் இதோ இங்கே வந்துவிட்டார், இதோ இங்கே வந்துவிட்டார்' என்று பரமபத வாஸிகளாவலுடன் பாரிக்கும் ரஸத்தை ஸூசித்தது போலிருக்கும் தனித்தனி அந்வயம். 'அவர் வருகிறார், அவர் வருகிறார்' என்ற பேச்சும் பாரிப்பும் அவர்களுக்குத்தான் பொருந்தும். இவ்விபூதியை விட்டுப் போவதே உள்ளது. 'அவர் அவர்' என்னும் திரும்பவும் திரும்பவும் பேச்சு 'ராமோ ராமோ ராம இதி' என்னும் பேச்சுப் போல. 'ஆக்ரோஸ' என்பதால் க்ரமநிர்ணயக ப்ரமாணங்களின் ஸூசநம். உபயமர்யாதைகளில் மிராசு உள்ளவர்கள் தங்கள் தங்கள் உபயக்ரமங்களை விடமாட்டார். 'தரதி விரஜாம்' 'ஆகத்ய விரஜாம் தரதி' கரை வந்த உடனே ஸூக்ஷ்ம சரீரத்தையெரித்து விட்டு, 'தாம் மநஸா அத்யேதி' என்றபடி ஸங்கல்பமாத்ரத்தால் விரஜையைத் தாண்டுகிறான். மனோவேகமும் கருத்திலிருக்கலாம். ஸ்நாநம் பண்ணி வஸ்த்ரத்தைக்களைந்து புது வஸ்த்ர தாரணத்திற்கு ஒட்டம். விளம்பம் பொறுக்கவில்லை. 'ஸ ஆகச்சதி விரஜாம் நதீம் தாம் மநஸா அத்யேதி, என்று ச்ருதி. தாண்டுகிறான். உடம்போடு தாண்டவில்லை. ஸங்கல்பத்தால் மட்டும். வாச: அகோசர- வர்ணனைக்கு எட்டாதது. எது? தத: பரம் அத்புதம்- அதற்கு மேலுள்ள அத்புதங்களை சொல்லி முடியாது. அந்த அத்புதத்தை தரதி- அடைகிறான். 'தரதி' என்பதற்கு தாண்டுகிறது, அடைகிறது என்று இரண்டு பொருள்களுமுள்ளதைக் காட்டுகிறார். இவர்கள் பன்னிருவரும் நித்யவைகுண்ட ப்ருத்யர்களான நித்யஸூரிகள் ப்ராக்ருத அக்நி முதலிய தேவதைகள் என்று கொள்வது ரஸம் என்று ஸாராவளி 509- வது ச்லோகம். ஸமாதியின்பத்தையே இன்னதென்று வர்ணிக்க முடியாதபோது மோக்ஷாநந்தம் வர்ணிக்கமுடியாத அத்புதமே. விரஜா நதி முக்தி நகருக்ககிழ் போன்றது. 'தரத்யாவரணம் தத்ர ஜீவ்யாம்' ப்ராக்ருதி விபூதிக்ககிழ் வேண்டியதில்லை. இங்கே 'உவகம்ஹநம்' எனும் நிர்வஹண ஸந்த்யங்கம். 'அத்புதாய ஸ்ய ஸம்ப்ராப்தி ரூவஸம்ஹந மிஷ்யதே' என்று அதன் லக்ஷணம். 'அத்புதம் தரதி' அத்புதத்தை அடைகிறான் என்றதால் இந்த அங்கத்தின் ஸூசநம். பகவானோடு மாஸோவம ஸம்ஸம்ச்லேஷந்தருவதற்கு மிக்க பொருத்தமுடைய பெயர். 'விரஜா, விஜரா' என்று இருவிதமும் பாடம். தீக்ஷிதர் காட்டியது. கௌஷீதிகி பாஷ்யத்திலும் ஜரை, ரஜஸ் இரண்டையும் போக்குவதால் இருவித நாமமும் என்று ஸாதிக்கப்பட்டது. கர்மக்ஷயத்தாலபஹத பாப்மாவாகி விஜரனும் விம்ருத்யுவுமாகிறான்.

விஷ்ணுபக்தி:— பகவானுடைய ஸங்கல்பமாகிய ப்ரளயகாலாக்நியால் பாபஸமுத்ரமநேகமாய் எரிந்து உலர்ந்து விட்டது. ப்ராரப்தத்தில் துளியே மிச்சம். ஸீதைக்கும் தமக்கும் குறுக்கே இருந்த ஸமுத்ரத்தை 'ஸாமரா ரோஷயிஷ்யாமி' என்று தஹிக்கத் தொடங்கினதை, 'பாராவாரபயோவிசோஷண' ச்லோகம் வர்ணித்தது. ப்ரக்ருதியும் பாம்புச் சட்டைபோல் என்பது ப்ருஹதாரண்யகம் காட்டிய த்ருஷ்டாந்தம். சுத்தமான சேஷஸ்பாவத்தை யடைந்த புருஷனை விட்டுக் கழண்டு போகும்.

ராஜா:— (சகுந்தலை ஆச்ரமத்தை விட்டு பதிக்ருஹத்திற்குப் புறப்படும்போது, செடி, கொடி, வ்ருக்ஷாதிகளிடந்தெரிவித்ததுபோலத் தெரிவிக்கிறார். இந்தப் புருஷன் வளர்த்த வித்யைகள், சாந்தி, தாந்தி முதலிய அந்தரங்க ஸாதந குணங்கள் முதலியதைக் கூப்பிட்டுத் தெரிவிக்கிறார்.)

(தொடரும்)

ஸ்ரீ:

சௌசம்

(சௌசம் அல்லது பாரிசுத்யம்)

(சென்றஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வீடுவாயில்களுக்கும், நதீதடாகாதிகளுக்கும் அருகிலில்லாமல் தூரத்திற் சென்று, ஜனஸஞ்சாராதிகளுக்கும் வஸதியில்லாத ஏகாந்தமான இடத்தில் ஜலமலவிஸர்க்கம் செய்யவேண்டுமென்பதை 'தூராத்' என்னும் சொல் குறிப்பிடுகிறது. பாநபாகாதிகளுக்கு உபயோகமான ஜலாசயங்களாகிய ஏரி, குளம் முதலியவற்றிலேயே ஜலமலப்ரக்ஷாளநம் பண்ணுவது ஆசாரத்திற்கும், ஆரோக்யமுறைக்கும் ஆகாத ஆக்ஷேபகரமான செயல். மேலும் அவ்வித்ம் குஹ்யசோதநம், பாதசோதநம் முதலிய சௌசத்தை ராஜவல்லபன் கூறியவகையில் அபீக்ஷ்ணம் (அடிக்கடியும்) செய்யவேண்டுமென்னும் முறையை இந்த யாஜ்ஞவல்க்யர் வசநத்திலுள்ள 'நித்யம்' என்கிற சொல் வற்புறுத்துகிறது.

பல மலாயதநங்களின் சௌசம்

மலவிஸர்க்கம் செய்யும் அவயவங்களைச் சுத்தம் செய்வது மாத்திரம் பாரிசுத்யமாகாது. பற்களைப் பலமுறையும் துலக்கிச் சீராகப் பராமரிப்பது, நாக்கைத் தேய்த்தழுக்கற்றதாகச் செய்வது, சிரஸ், உடல் இவற்றில் சேருமழுக்குகளை அலம்புவதற்காக நாள்தோறும் நீராடுவது ஆகியவையும் ஆரோக்ய ஆசாரங்களுக்கு அவசியமானவையென்று ஆயுர்வேத கிரந்தங்கள் விளக்குகின்றன.

> மலாயதநசோதநம் நநு விதாய தந்தாநநு
> ப்ரம்ருஜ்ய கதிரேங்குதீஸஹரஸநிம்பகாஷ்டாதிபி: । மலம் ச ரஸநாதலாத் அத நிவார்ய
> சாத்பிர்முகம் விசோத்ய ஸஹஜலைச்சரேத்
> ஸ்நபநகர்ம சௌசார்த்தகம் ॥

இங்கு 'சௌசார்த்தகம்' என்பது சுத்தியைக்குறிக்கும்பாரிபாஷிகச் சொல். இச்சொல் மலசோதநம், தந்ததாவநம், (பல் துலக்கல்) ஜிஹ்வாநிர்லேகநம், (நாக்கைத் தேய்த்தல்) கண்டூஷம், (வாயைக் கொப்புளித்து அலம்புதல்) நீராடுதல் ஆகிய இவ்வனைத்தையும் குறிக்கும். தர்மசாஸ்திர வசநங்கள் இதிலும் மேலாக ஆரோக்யாசாரங்களுக்கான உபாயங்களை வற்புறுத்த உத்தேசித்தே ப்ரவ்ருத்தித்திருப்பதாகத் தெரிகிறது. நித்திரை செய்து எழுந்திருக்கையிலும் மல-ஜல விஸர்க்காதிகளுக்கான அவயவங்களிலும் நாசி முதலான இதர த்வாரங்களிலும் மலங்கள் நுண்ணிய அளவாகவேனும் சேர்ந்திருக்குமென்றும் அவற்றையும் தக்கவாறு நிர்மலமாகச் செய்யவேண்டுமென்றும், மிக்க தூய்மையான ஜலத்தைக் கொண்டு ஆசமநாதி உபாயங்களால் சுத்தஞ்செய்யவேண்டுமென்றும் கருதியே 'த்ரி: ப்ராச்யாபோ த்விருந்ம்ருஜ்ய காங்யத்பி: ஸமுபஸ்ப்ருசேத் । அத்பிஸ்து ப்ரக்ருதிஸ்தாபி: ஹீநாபி: பேநபுத்புதை:॥ என்று ஸ்ம்ருதியிலும் விதி காணப்படுகிறது. இவ்வசநத்திற்கு வியாக்யாநம் செய்யும் விஜ்ஞாநேச்வரர் 'ஊர்த்வகாயமென்கிற கழுத்திற்கு மேற்பட்ட அவயவங்களில் அடங்கிய நாசித்வாரம் முதலியவற்றிற் சேரும் மலாம்சங்களைப் புறப்படுத்துவதற்காகப் பரிசுத்தமான ஜலத்தினால் கழுவிச் சுத்தம் செய்யவேண்டும் என்பது கருத்து' என்கிறார்.

'ஊர்த்வகாயகதாநி க்ராணதீநி த்வாராணி ததந்தஸ்ஸஞ்சிதமலநிவாரணார்த்தம் அதிநிர்மலாபிரத்பி: சோதயேத்' என்பது அந்த வியாக்யாந பங்தி. ஆசமநமும் பாஹ்யாந்தரசுத்திக்கான ஒரு சௌசக்ருத்யமே. 'சுசிப்ராணீ:' என்றல்லவோ ஆசமநப் பெருமை வழங்கப்படுகிறது.

விழுப்பு அல்லது ஸாங்கர்யம்

அசுத்தம் கலந்துள்ளவிடங்களில் இணங்கு

தல், அத்தகைய உணவுகளை உண்பது, அழுக்கடைந்தவரோடு அல்லது வியாதிக்ரஸ்தர்களோடு சேருவது, வியவஸ்தையில்லாத வகையில் நடந்தொழுகுவது முதலியனவும் துராசாரமாகுமென்றும், அவற்றைச் சரிவரவே பரிஹரிப்பதும் சௌசகர்மந்தான் என்றும் பார்ஹஸ்பத்யஸம்ஹிதை விளங்கக் கூறுகிறது.

அபக்ஷ்யபரிஹாரச்ச ஸம்ஸர்கச்சாப்பநிந்திதை: । ஸ்வதர்மே ச வ்யவஸ்தாநம் சௌசமித்யேவ கீர்த்யதே ॥

'ஜ்வரம் முதலிய அறுபத்தினாலு ஸாங்கிராமிக வியாதிகளில் எதனாலாவது வருந்துபவனுடைய தேஹம் தோஷதுஷ்டமாயிருக்கும்; அத்தகைய பிணியாளியின் அருகில் அண்டுவது தகாது; அவர்களிடம் அணுகாமலிருப்பவர் தம் தேஹசுத்தியைக் காத்துக் கொள்பவராவர்; இச்சுத்திமுறையில் கருத்தாயிருப்பவர் தம்மைப் பிணிகளிடமிருந்தும் காப்பாற்றிக்கொள்ளமுடியும்' என்று பின்வரும் வசநங்களால் சக்ரபாணியும் ஒரு சிறந்த சௌசமுறையைக் கூறுகிறார்:

ஜ்வராதிபிச்சதுஷ்ஷஷ்டிவ்யாதிபிர் யே ஹ்யபித்ருதா: । வபுஸ்தேஷாமசுத்தம் ஸ்யாத் ந கச்சேத் தத்ஸமீபத: ॥ சுசித்வமாத்மநஸ்தேந ரோகதச்சாபி ரக்ஷணம் ।

'நைர்மல்யத்திற்கான நன்னெறிகளில் நோக்கமுள்ள சிஷ்டபுருஷன் பிறர் உபயோகித்த படுக்கை, ஆஸநம், உடைகள் முதலியவற்றையும் உபயோகிக்கக் கூடாது. பரஸ்த்ரீ ஸம்ஸர்க்கம்பரமஹேயம். வாய் திறந்து உறத்துச் சிரிப்பதும், வாயை மறைத்துக் கொள்ளாமல் இருமுவதும், அவ்வாறு கொட்டாவி விடுவதும் தோன்றியவாறு கண்டவிடங்களிலும்நாசியைச் சிந்துவதும், அவ்விதமே எச்சிலைத் துப்புவதும், அநாவசியகமாய் அயலாரைத் தீண்டித் தழுவிப் பழகுவதும் ஆக இவையாவும் சுசியாயிருக்க விரும்புமவனால் முற்றிலும் விலக்கத்தக்கவையாகும். ஆசாரத்திற்கு அடிப்படையானது சௌசமே. அதுதான் ஆரோக்யத்திற்கும் ஆயுளின் அபிவ்ருத்திக்கும் ஆதாரம். தேஹமனோவலிமையையும் சரீரகாந்தி முதலியவற்றையும் வளர்ப்பதும் சௌசமே' என்றவாறு சுக்ரநீதியும் சுருங்கப் பின்வருமாறு கூறுகிறது:—

பரச்சய்யாஸநாதீநி பரதாரபரிக்ரஹாந் । உச்சை: ப்ரஹஸநம் காஸம் ஷ்டீவநம் காமதஸ்ததா ॥ ஜ்ரும்பணம் காத்ரஸங்கம் ச சுசிகாங்க்ஷீ விவர்ஜயேத் । சௌசமாசாரமமலம் ஸ்யாதாரோக்யஸ்ய காரணம் ॥ ஓஜஸஸ் தேஜஸச்சாபி ச்ரேயஸச்சாபி வர்த்தகம் ।

தொடரும்

முக்கிய அறிவிப்பு

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேண்டும். சந்தாதாரர்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷ்டிவிலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லாக் கடிதப்போக்குவரத்துகளும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும். பணம் அனுப்பும்போது உங்கள் **சந்தா நெம்பரையும்,** மணியார்டர் கூபனின் பின்பக்கத்தில் **விலாஸத்தையும் மறவாமல் நன்றாகத்தெரியும்படி எழுதவேண்டும்.**

பத்ரிகையில் ப்ரசுரிக்கவேண்டிய வ்யாஸங்கள் செய்திகள் முதலியவைகள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விலாஸத்திற்கு அனுப்பவேண்டும்.

ஸம்பாதகர், "ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா"
ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம், செங்கல்பட்டு ஜில்லா.

ஸ்ரீ:

நற்போதுபோக்கு

[ஆய்ச்சியர் முறையீடு]

[இது * ஸ்ரீபாத்மோத்தர புராணச் செய்யுளை யொட்டி எழுதப்படுகிறது.]

ஸ்ரீ கண்ணபிரான், ஒருத்திமகனுய்ப் பிறந்தோரிரவில் ஒருத்திமகனுய் ஒளிந்து வளர்ந்து வருங்காலை, யசோதை அவனை மாணிக்கங் கட்டி வயிரமிடைகட்டி ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டிலில் கிடத்தித் தாலாட்டிப் பாலூட்டிச் சீராட்டி வருகிருள். அப்போது கம்ஸன் ஏவலால் பூதனை சகடனுதியோர் கண்ணனை மாய்க்க வருகின்றனர். கண்ணன் பாலுக்கழுகிற பாவனையில் பூதனையையணுகி, அவள் பெருமுலையூடுயிரை வற்ற வாங்கியும், சகடாஸுரனைத் தன் தாள்களால் தகர்த்தும் மாய்த்தான்.

பின்னரவன் செங்கீரையாடியும் சப்பாணி கொட்டியும், தளர்நடையிட்டும், மழலை மொழிந்தும் யாவரையும் மகிழ்வித்து வந்தான். ஓடியாடும் நிலைபடைந்ததும், அவன் ஆய்ச்சியர் இல்லங்களிற் சென்று வைகலும் வெண்ணெய் கைகலந்துண்ணத் தலைப்பட்டான். அது கண்ட ஆய்ச்சியர் பலர் கண்ணன் செய்யும் விஷமச் செயலுக்காற்ருது யசோதையினிடம் வந்து முறையிடுகிருர்கள். அம்முறையீடுகள் வருமாறு:—

ரேவதி:— தாயே! யசோதா! உங்கள் பிள்ளை உருவுகரிய ஒளிமணிவண்ணன் கண்ணன் என் வீட்டில் வந்து என்ன செய்தான் தெரியுமா? அவன் ஒருவருமறியாமல் மாயமாய் என் வீட்டில் வந்து, அங்குள்ள என் பெண்களை மயக்கி அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே நெய், பால்களைத் திருடித் தின்றுவிட்டு, மேலுமேதேனும் அகப்படுமோவென்று தேடிக்கொண்டிருக்கிருன். அப்போது திடீரென்று நான் வரவே, என்னைப் பார்த்து என் கையில் அகப்படாமல் ஓடோடியும் போய்விட்டானம்மா.

சியாமளா:— வண்டுகள் மொய்க்கப் பெற்ற கூந்தலாய்! என் வீட்டில் வந்து உன் பையன் செய்த அக்ரமத்தைக் கொஞ்சம் கேள். இது எங்கேனும் யாரேனும் இதுவரையில் செய்ததுண்டாவென்பதை யோசி. எனக்கிரண்டு மூன்று பெண்பிள்ளைகள் உண்டு. க்ருஷ்ணன் என் வீடேறிவந்து அவர்களைக் கூப்பிட்டு ‘என்டீ பெண்களா! என்னுடைய பந்துகளை என் திருடிக்கொண்டு போனீர்கள்? அவைகளை உங்கள் மார்பில் வைத்துத்துணியால் மறைத்து விட்டால் அவை எனக்குத் தெரியாமலா போய் விடும்?’ என்று சொல்லி அவர்களின் மார்பில் கையிட்டுத் தனங்களை யிழுக்கிருனம்மா. இச் செய்தியை என் பெண்கள் என்னிடம் முறையிட்டமுகிருர்கள். தயிர், பால், வெண்ணெய் திருடினுல் பொறுக்கலாம். இதை எப்படிப் பொறுப்பது? உன் பிள்ளையைக் கொஞ்சம் அடக்கிவையேன். மஹாதுஷ்டன், மஹாதுஷ்டன்.

ஸரஸா:— மாமீ! நான் சொல்வதைச் சிறிது கேளுங்கள். நானும் என் அம்மாவும் விடிவதற்கு இரண்டு நாழிகை முன் எழுந்திருந்து தயிரைக் கடைந்து வெண்ணெய் திரட்டி அதனைப் பற்பல தாழிகளில் நிரப்பி, இந்திரன் சந்திரன் காணுதபடி ஓரிடத்தில் அதனைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தோம். உங்கள் க்ருஷ்ணன் அதனை எப்படியோ யறிந்து அத்தனை வெண்ணெயையும்வாரிவிழுங்கிவிட்டு, போதாக்குறைக்குச் சில குரங்குகளுக்கும் உருட்டியுருட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிருன். கிட்டேபோகப்படலை. குரங்குகளை ஏவுகிருன். அவை கடிக்கவருகின்றன. தூரநின்று பார்த்து தயிர், பால், வெண்ணெய்களைப் பறிகொடுத்து

---

* இப்புராணம் வடமொழியிலிருந்து 85ஆண்டுகட்கு முன்னர் (சுக்ல தைமீ) விலக்ஷணகவி புதுவை ஏ. வி. இராமானுச நாவலர் அவர்களால் தென்மொழியில் செய்யுள் நடையில் இயற்றப்பட்டு அச்சிடப்பட்டது.

வந்துவிட்டோம். சிரமப்பட்டுச் சேர்த்த பொருள் போய்விட்டதே என்று வயிறெரிகிறதம்மா. இப்படியும் செய்வானா இந்தக் கண்ணன். அவனுக்கு ஒருவரிடத்திலும் பயமில்லையே. தாயாயிருப்பவள் அவனைத் தண்டித்தடக்கி வைக்க வேண்டாமா?

ஸுகுணா:—தையலே! என் வார்த்தையைக் கொஞ்சம் கேள். பார்வைக்கு உன் பிள்ளை இளங்குழந்தைதான். நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். அவன் செய்யும் குறும்பு ஒருவரும் செய்யமாட்டார்கள். இன்றைதினம் கை வலிக்கக் கால் வலிக்கத் தயிரைக் கடைந்து வெண்ணெயைச்சேர்த்து கைக்கெட்டாத ஆகாயத்தை அளாவிய ஒருயரமான இடத்திலுறியைக் கட்டி அதில் வெண்ணெய்ச் சட்டியைத் தொங்கவிட்டு வைத்திருந்தேன். இந்தக் கள்ளக் கண்ணன் உள்ளே புகுந்தான். உறியின் கீழே உட்கார்ந்து கையை மாத்திரம் சட்டியைத் தொடும்படியாக வளர்த்தி நீட்டினான் சட்டியை எடுத்துக் கீழே வைத்துக்கொண்டு துளியும் மிச்சமில்லாதபடி அத்தனை வெண்ணெயும் தின்றுவிட்டானம்மா. வெண்ணெய் போனதற்கு நான் வருந்தவில்லை, அது அவனுடம்புக்குத்தானாகுமா? யோசியேன்.

கீதா:—மடமயிலே! நான் உன்னிடம் உன் பிள்ளை விஷயமாய் வயிற்றெரிச்சல் தீர முறையிட்டுக்கொள்ளலாமென்று வந்தேன். இன்றைதினம் உடல் நலமில்லாமையாலென் பெண்ணைத் தயிர் கடையச் சொல்லியிருந்தேன். அவள் தயிர் கடைந்து கொண்டிருக்கையிலங்குக் கண்ணன் வந்து ஓரிடத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். அவனை என் பெண் எப்படியோ கண்டுபிடித்து, 'வெண்ணெய் விழுங்க வந்திருக்கிறானே இந்தத் திருடன்' என்று கத்தினாள். அவள் கத்தின சப்தத்தைக் கேட்டு அவனை ஓரறை அறைந்து அவளைக் கொல்லைப் பக்கம் இழுத்துக்கொண்டுபோய் அவள் முகம் முழுவதும் வெண்ணெயைப்பூசி அவள் கண்ணை மறைத்து அத்தனை வெண்ணெயையும் தின்றுவிட்டு ஓடிவிட்டானம்மா. கொஞ்சமும் தயாதாக்ஷிண்யம் இல்லாதவனடீ உன் பிள்ளை. என்ன பிள்ளை? போ. வீட்டில் ஒன்று வைக்க ஆசையில்லை.

பரிமளா:—பால் மொழியாய்! இது கேள். உன் பிள்ளை கண்ணன் என் வீட்டுக்கு வெண்ணெய் திருட வரவில்லை. வந்தால் குழந்தை தின்றால் தின்னட்டுமென்றிருப்பேன். குழந்தையென்றால் எனக்கு ரொம்ப ஆசை. அவன் விஷமத்தை வெளியில் சொல்லவும் வெட்கமாயிருக்கிறது. நேற்றிரவு நம் கண்ணன் என் வீட்டுக்கு வந்திருந்தான். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு படுக்கப் போகும் ஸமயம். அப்போது புருஷர்கள் யாரும் வீட்டிலில்லை. அப்போது என்னைப் பார்த்து 'நங்காய்! நீ திருடி' என்றான். அதற்கு நான் 'எண்டா என்னைத் திருடி என்கிறாய்? உன்னிடம் நான் என்ன திருடிவிட்டேன்?' என்றேன். 'உன் முலை என் மனத்தைக் கவர்ந்தது; என் மனத்தைக்கொள்ளைகொண்ட முலைகள் இவைதானே? என்று என் மார்பைத் தடவுகிறான். இப்படிப்பட்ட அழகான பிள்ளைக்கும் வெட்கமில்லை. அவனைப் பெற்ற உனக்கும் வெட்கமில்லை, போடீ.

சந்த்ரா:—உன் பிள்ளைமேல் குற்றஞ்சொல்ல வந்ததாக என்னைக் கோபிக்காதே. நடந்ததை நடந்தபடி சொல்கிறேன். உன் பிள்ளை மஹா விஷமக்காரன்; தயிர், பால், வெண்ணெய்களைக் களவு காண்பவன். இது ஊரெங்கும் அறிந்த விஷயம். இதற்காக நான் என் வீட்டுவாயில் வாசற்படியில் இந்த க்ருஷ்ணன் நுழைய வொட்டாதபடி என் பெண்ணைக் காவல் வைத்திருந்தேன். இவன் வழக்கப்படி களவு செய்ய வந்தான். அப்போது என் பெண் அவனை உள்ளே நுழையவொட்டாதபடி தடுத்தது. அதன்மேல் உன் பிள்ளை கோபம்கொண்டு என் பெண்ணை ஒரு பள்ளத்தில் 'தொப்' என்று தள்ளினான். என் பெண்ணுக்குப் பலவிடங்களில் நல்ல காயம். 'அடீ பெண்ணே! குருடீ! காலைவேளையில் கண் தெரியவில்லையா? என் பள்ளம் தெரியாமல் விழுந்தாய்? இரத்தத்தைத் துடைத்து மருத்துவம் செய்கிறேன், வா, என்று கூப்பிடுகிறான். இப்படிப்பட்ட அநியாயம் எவ்விடத்தில் நடக்கும்? சொல்.

விமலா: மான் நோக்கினாய்! இந்தக் கதையைக் கொஞ்சம் கேள். ஸமீபத்தில் ஐந்தாறு

நாட்களாய் உன் பிள்ளை என் வீட்டுக்கு அடிக்கடி வந்து என் பெண்களோடு விளையாடிக் கொண்டிருக்கிறான். குழந்தைகள் ஸஹஜமாய் விளையாடிக் கொண்டிருக்கட்டுமென்றிருந்தேன். நேற்றைதினம் இவன் செய்த அக்ரமம் தெரியுமா? 'அடி பெண்ணே! தலையை வாரி அழகாய்ப் பின்னல் போட்டுவிடுகிறேன் வா' என்று என்பெண்ணைக்கூப்பிட்டான். என் பெண்ணும் அவன் கூப்பாட்டுக்கிசைந்து வந்தாள். அவனுமவளுக்குத் தலைவாரிப்பின்னுகிற பாவனையாய் பின்னிக்கொண்டேவந்து பின்னலின் நடுவில் ஒருதேளை வைத்துப்பின்னிவிட்டான். அந்தத் தேள் பின்னலினின்றும் வெளிவந்து என்பெண்ணைக்கழுத்தில் கொட்டிவிட்டது. என் பெண் 'குய்யோமுறையோ' என்று அழுது அலறிற்று. அதன்மேல்உன் பிள்ளை 'இனி விஷமம் பண்ணமாட்டீர்களே! மாட்டீர்களே' என்று அவர்களுக்குப் புத்தி கற்பிப்பவன்போல் சொல்லிச் சிரிக்கிறான். இப்படியும் ஒரு பிள்ளையிருக்குமாடி! இதற்கு அழுவதா? சிரிப்பதா? சொல்.

வநஜா:— மாமயிலனையநங்காய்! இதுகேள். கிருஷ்ணன் செய்யும் துஷ்டத்தனம் உலகறியும். இவனுக்காக என் வீட்டில் நிலவறை ஒன்று அமைத்து, அந்த அறைக்குள் பால், தயிர், நெய், வெண்ணெய் எல்லாம் வைப்பது வழக்கம். பல நாட்களாய் இதனை இவனறியாதிருந்தான். இன்றெப்படியோ அதனைக் கண்டுபிடித்து அந்நிலவறையிற் புகுந்து யாவற்றையும் திருடித் தின்றுவிட்டுப் போய்விட்டான். இதோ இந்த என் பெண் சாட்சி. நான் என்ன செய்வேன். இனிப் பொருள்களை இவனிடத்திலிருந்து எப்படிக் காப்பாற்றுவதோ அறியேன்.

ஸுகந்தா:— இதைக் கேள் யசோதா! கிருஷ்ணன் விஷமத்துக்காகவே என் தந்தை ஓர் இருட்டறை கட்டியிருக்கிறார். அதில் நாங்கள் விளக்கை வைத்துக் கொண்டு பால், தயிர் வெண்ணெய்களைப் பத்திரப்படுத்திவைப்பதுண்டு. அந்த இருட்டறையில் நேற்று உன் பிள்ளை நுழைந்தான். உடம்பினின்று ஸூர்யன் உதயமானாற்போன்று ஓர் ஒளியை உண்டுபண்ணி, அதனால் தயிர், பால், வெண்ணெய்கள் இருக்குமிடத்தையறிந்து அவைகளை எல்லாம் தின்று போந்தான். நாங்கள் என்ன செய்வோமடி! எந்த உபாயமும் இவனிடம் பலிக்கவில்லையே!

ஸுகந்யா:— மங்காய் இதைக் கொஞ்சமுற்றுக் கேள். நான் என் கணவரோடு சிறிது நேரம் வேடிக்கையாய் அளவளாவிக் கொண்டிருந்தேன். அவர் பிறகு வெளியிற் சென்றார். என் வீட்டு வாயிலில் என் கன்றுக்குட்டி வந்து நின்றது. அதைச் சிறிது தடவிக் கொடுக்கலாமென்று அதனிடம் போனேன். அங்கு க்ருஷ்ணன் நின்றுகொண்டிருந்தான். 'அடி ஸுகந்யா! அது உன் கன்றன்று; இதோ இருக்கிறது உன் கன்று; அதை அணைத்து முத்தம் கொடு' என்று ஒரு கன்றைக் காட்டினான். அதுதான் என் கன்றென்று நினைத்ததை அணைத்தேன். அது ஒரு சிங்கக்குட்டியாக இருந்தது. உடனே பயந்து அலறி அடித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடினேன். அதுமுதல் ஜ்வரம்; பயம்; கிலி. என் செய்வேன். இப்படியா செய்யும் ஒரு குழந்தை! குழந்தையா அது? ஊரைப் பரிபவப்படுத்துவதற்கென்று குழந்தை பெற்றுக் கொண்டிருக்கிறாயே.

இந்திரா:— என்ன தௌஷ்ட்யமடி உன் பிள்ளைக்கு உன் பிள்ளை என் வீட்டுக்குள் நுழைந்து சட்டியை உடைத்தான். சப்தங்கேட்டது. உள்ளே நுழைந்தேன். ஒரு கை வெண்ணெயைவாரி எடுத்துக்கொண்டு கண்ணுக்குத் தெரியாமல் ஓடிவிட்டான். அவன் கொண்டு வந்த காட்டுப் பூனையொன்று மீதி வெண்ணெயைத் தின்று கொண்டிருந்தது. அவனைக் கொல்லைப்புறம் போய்க் கண்டுபிடித்துக் கேட்டதில் 'நான் உன் வீட்டுச் சட்டியை உடைக்கவில்லை. பூனைதான் உடைத்தது. என்மேல் ஏன் வீணில் பழி சுமத்துகிறாய்? வீணாய்ப் பாவத்தைக்கட்டிக்கொள்ளாதே' என்கிறான். இவன் வார்த்தை இவனுக்குத்தான் பொருத்தம். வேறொருவர் இதனை ஒப்பார். சீ! சீ! என்ன பிள்ளையோ அது?

(தொடரும்)

ஸ்ரீ:

ஆசார்யமஹிமை

ஸ்ரீய:பதியான திருவேங்கடமுடையான் ஆவாரார் துணையென்று அலைநீர் கடலுள் முந்தும் நாவாய்போல், பிறவிக்கடலுள் நின்று துளங்குகிற சேதனர்களை ஶாஸ்த்ரமாகிற ஜ்ஞானத்தைத் தந்து உஜ்ஜீவிப்பிக்கவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் ஆசார்யரூபேண தத்தத்காலங்களிலவதாரம் செய்து தம்மால் ப்ரதிஷ்டிதமான ஸம்ப்ரதாயத்திற்கு பாஹ்யாந்தர குத்ருஷ்டிகளாலே பல முகங்களான கலக்கங்கள் நேரிட்டஸமயங்களில் அதை ஶமனம் செய்யத் திருவுள்ளம்பற்றி, இது நாவீறுடைய ஒருவனை முன்னிட்டல்லது முடியாது என்று கணிசித்து, சக்ரவர்த்தித் திருமகனாய் அவதாரம் செய்வதற்கு‘பாயஸம்’ என்கிறஒரு வ்யாஜத்தை முன்னிட்டாப்போலே தன்னுடைய கண்டையை அதிஷ்டானம் செய்து அதின்மூலமாக தாம் விலக்ஷணமாக ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகரூபேண அவதாரம் செய்தருளினானென்பது ‘வேங்கடேஶாவதாரோऽயம்’ ‘உத்ப்ரேக்ஷ்யதே புதஜனைருபபத்தி பூம்நா கண்டாஹரேஸ்ஸமஜநிஷ்ட யதாத்மநேதி’ ‘அன்றிவ்வுலகினையாக்கி’ என்றிவை முதலிய ப்ரமாணங்களினால் ஸித்தம். இப்படிப்பட்ட அவதார வைலக்ஷண்யத்துடன் கூடியவராய், பன்னுகலை நால்வேதப்பொருளையெல்லாம் பரிமுகமாயருளிய பரமனுடைய அருள் பெற்று ஸகலஶாஸ்த்ரங்களிலும் நிபுணராய், திவ்யதம்பதிகளாலே அநிதரஸாதாரணமான வேதாந்தாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரேத்யாதி பிருதங்களை அநுக்ரஹிக்கப்பட்டு விசேஷகடாக்ஷம் பெற்றவராய், ஆசார்யத்வோபயுக்த ஸகலகல்யாணகுணபரிபூர்ணராய், ஸுப்ரக்யாத வைபவருமான நம் தேசிகன் முமுக்ஷுக்களான ஸர்வஜனங்களும் எளிதாக தத்வஹிதபுருஷார்த்தங்களை ஸம்சய விபர்யயங்களறத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற அபாரகாருண்யத்தாலே பல பாஷைகளில் பல க்ரந்தங்கள் செய்தருளினார். ‘சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் பாரொன்றச் சொன்ன பழமொழியில், ஓரொன்றுதானே யமையாதோ தாரணியில்வாழ்வார்க்கு வானேரப்போமளவும்’.

ஆசார்யனை அச்சுதனைப்போல் அர்ச்சிக்கவேணுமென ஸர்வஸம்மதம். ஆசார்யாநுக்ரஹம் பெற்றவர்களிடம் அலக்ஷ்மிக்கு அண்ட இடம் கிடைக்காது. ‘அலக்ஷ்மீ: கலஹாதாரா நதேஷ்வாஸ்தே கதாசந’ ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு மூத்தவளான அலக்ஷ்மிதேவி (மூதேவி) பெருமாளிடம் சென்று ‘என் தங்கையை நீர் ஏத்துக்கொண்டுவிட்டீர்; எனக்கும் இருப்பிடம் சொல்லும்’ என, ‘எந்த க்ருஹத்தில் இருவேளையிலும் சண்டை சர்ச்சரவுகள் விடாமல் நடக்கிறதோ அங்கு நீ நித்யவாஸம் செய்’ என்றநுக்ரஹித்தார். அவளைத் தூரத்த சண்டை குறையவேணும். அதற்குக்காரணமான பொருமை மனத்திலிருந்து நீங்கச் செய்ய வேண்டும், அது பொருமையற்றவர்களுக்கு ஸாத்யமாகாது. பொறுமை ஜ்ஞானத்தால் ஸம்பாதிக்கத்தக்கது. அந்த ஜ்ஞானம் ஆசார்ய கடாக்ஷம் எங்கு செல்லுகிறதோ அங்கு நான் முன்னே என்கிற கணக்கில் செல்லுகிறது. ஆசார்யஸம்பந்தம் பெறுவிடில் புண்யங்கள் பல செய்தாராகிலும், இப்பவக்கடலைக் கடக்க மாட்டார்கள். அதைப் பெற்றவர்களுக்கு அந்தமிலாப் பேரின்பமடைய ப்ரபல பாபங்களும் தடங்கலாகாது.

‘பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத்। ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாதாசார்யவாந் பவேத்’ என்று ஆசார்யவத்தையே ஸர்வருக்கும் மோக்ஷகாரணமென்றறுதியிட்டார்கள். புண்டரீகனென்பவர் ஒரு தனிகனான ப்ராஹ்மணர். அவர் வேதாத்யயனம் முதலியவைகளை யதாக்ரமம் செய்து தர்மாநுஷ்டானத்தில் நிலைநின்றிருந்தார். மாதாபிதாக்களுடைய ஶுஶ்ரூஷைகளை யதாஶாஸ்த்ரம் நடத்திப்போந்து தீர்த்த யாத்ரைக்குப் புறப்பட்டார். அனேக புண்யக்ஷேத்ரங்களில் வஸித்து ஸகலபாபங்களையும் போக்கடித்துக் கொண்டு பக்தியோகம் பண்ணிக்கொண்டிருந்தார். ஆகிலும் பகவத் ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லை, இப்படியிருக்கும்பொழுது ஒரு ஸமயத்தில் நாரதஸமாகமம் இவருக்கு நேர்ந்தது. நாரதர் திருவஷ்டாக்ஷரத்தின் பெருமையை பரக்க நிருபித்து அதை இவருக்கு

உபதேசித்து, அதில் நிஷ்டையை யுடையவரா
யிருக்கும்படி நியமிக்க, இவரும் அப்படியே
அதில் நிஷ்டையை யுடையவராய், அதினுல்
பகவானை ஸாக்ஷாத்கரித்து மோக்ஷத்தை
அடைந்தார். 'மாநுஷ்யம் ப்ராப்ய லோகேऽ
ஸ்மிந் ஸமூகோ பதிரோऽபி வா | நாபக்ராமதி
ஸம்ஸாராத் ஸ கலு ப்ரஹ்மஹா பவேத்' மநு
ஷ்யஜந்மத்திலே பிறந்து ஶ்ரோத்ராதிகரணங்
களையும் விதேயமாகப் பெற்று இவற்றைக்
கொண்டு ஈச்வரனை ஆச்ரயித்து இந்த ஸம்ஸா
ரத்தைக் கடவானுகில் இவன் ப்ரஹ்மஹா
வென்றதிறே. 'க்ஷத்ரபந்துரிதி க்யாத: ராஜா
ப்ராணிவிஹிம்ஸக: | ஸந்த்யக்தோ பந்து
லோகேந தஸ்மிந் தூர்வ்ருத்தசேதஸி || சிந்
தாம் சகார ஸ முநி: க்ஷத்ரபந்தௌ தயாபர:'
க்ஷத்ரபந்து என்கிற ஒரு ராஜா காட்டில்
வஸித்துக்கொண்டிருந்து அங்கிருந்த மஹர்ஷி
முதலானவர்களை ஹிம்ஸித்துக்கொண்டிருந்
தான். இப்படி பல ப்ரஹ்மவித்துக்களினிடத்
தில் செய்யப்பட்ட பாபங்களதிகமாக இருந்த
போதிலும் ஏதோ ஒரு ஸுக்ருதம் பலிக்கும்
காலத்தில் நாரதமஹர்ஷியை ஸந்திக்கும்படி
நேர்ந்தது. இவன் தன்னுடைய வழக்கப்பிரகா
ரம் அவரை அடிக்கத் தடியை ஓங்கிக்கொண்டு
அவரை நோக்கிச் செல்ல, அவர் நீ இப்பொ
ழுது என்னை அடிக்கவருகிருயே இது பாபமா
புண்யமா என்று உனக்குத்தெரியுமா? பாபமா
யிருந்தும் குடும்பரக்ஷணத்திற்காகச் செய்கி
ருயேயாகில் நீ யாருக்காக இந்த பாபத்தைச்
செய்கிருயோ அவர்கள் இந்த பாபத்தில் ஒரு
பாகத்தை ஏற்றுக்கொள்வார்களா என்றறிந்து
வா, நான் அதுவரையில் இங்கேயே இருக்கி
றேன். நீ திரும்பிவந்து உன்னிஷ்டப்ரகாரம்
செய் என்று சொல்ல, இவனுக்கு பாகவ
தோத்தமராகிய அவருடைய தர்சனத்தினுல்
கொஞ்சம் ஜ்ஞானமுண்டாகி வீட்டிற்குச்
சென்று பார்யாதிகளைப் பாபத்தில் பங்கு
பெறுவார்களா என்று கேட்க, அவர்கள் மாட்
டோமென்று மறுக்க, நாரதரிடம் திரும்பி
வந்து, நான் இதுவரையில் தெரியாமல் அநே
கம் பாபங்களைச் செய்துவிட்டேன். இதி
லிருந்துதப்புவதற்கு உபாயமொன்று சொல்ல
வேண்டும் என்று ப்ரார்த்திக்க, கருணாநிதி
யான நாரதர் சொல்லுகிருர். பாபங்களைச்
செய்யும்போது சிரித்துக்கொண்டே செய்கி
றோம். அதை அநுபவிக்கிற ஸமயத்தில்
அழுது என்ன பலன். தான்யங்கள், சில ஆறு
மாதங்களிலும், சில நான்கு மூன்று மாதங்க
ளிலும் கதிர்வந்து பலனளிப்பதுபோல், அத்
யுத்கடமான புண்ய பாபங்கள் இவ்வுலகினி
லேயே மூன்று வருஷங்களில், மாஸங்களில்,
பக்ஷங்களில், நாள்களில் பலனைக் கொடுக்
கிறது. அதிலும் ப்ரஹ்மவிதபசாரம் மூன்று
ஜந்மங்கள் தொடர்ந்து செல்லுகிறது. ப்ரஹ்ம
புத்ரர்களான ஸநகாதிமஹர்ஷிகளிடம் பகவ
தந்தரங்கர்களான த்வாரபாலகர்கள் அபசாரப்
பட்டு ஹிரண்யகசிபு, இராவணன், சிசுபாலன்
முதலிய மூன்று ஜந்மங்கள் கழிந்தபிறகே
பாபம் கழிந்து பழைய ஸ்தாநத்தைப் பெற்றுர்
கள் என்றது முதலிய உபதேசங்களை இவ
னுக்குச் செய்தருளி 'அநுதாபாதுபரமாத்
ப்ராயஶ்சித்தோந்முகத்வத:' என்கிறபடியே
அவனுடைய மனத்தில் பச்சாத்தாபத்தை
உண்டுபண்ணி உபாயாநுஷ்டானம் செய்து
மோக்ஷத்தை யடையும்படி செய்தார்.

'ஸித்திர்பவதி வா நேதி ஸம்சயோऽச்யுத
ஸேவிநாம் | ந ஸம்சயோऽத்ர தத்பக்தபரி
சர்யாரதாத்மநாம்' ஸர்வேச்வரனை ஆச்ரயித்த
வர்களுக்கு ஸித்தி (பலம்) ஸந்தேஹம்; அடி
யார்களைத் தொண்டு புரிந்தவர்களுக்குப் பலம்
ஹஸ்தாபசேயமாகிறது. பாகவதர்க்குள்ள
ஏற்றத்தை ஸ்வாமி தேசிகனே 'தேனுர்கமலத்
திருமகளுந் திகழ்ந்துறையும் வானுடுகந்த
வர் வையத்திருப்பிடம் வன்றுமக் கானிமய
மும் கங்கையும் காவிரியும் கடலும் நாணகர
மும் நாகமும் கூடிய நன்னிலமே' என்று பல
படி படித்துள்ளார். சிஷ்யனுடைய மனத்
தில் மிகவும் ப்ரகாசமுள்ள ஜ்ஞாநதீபத்தை
ஏற்றி, 'வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்
கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினுன்' என்கிற
படியே ஒருவராலும் கலக்கமுடியாதபடி உப
தேசம் செய்து இருளனைத்து மாற்றினவர்க்கு
ப்ரத்யுபகாரத்தை ஸர்வஜ்ஞனை பகவானும்
அறிய சக்தியுடையவனல்லன் என்று ஸ்வாமி
தேசிகனே ஸாதித்தருளுகிருர், ஆகையால்
நாம் எப்போதும் ஆசார்யன்விஷயத்தில் ருணி
யாகவே இருக்கிறோம்.

ஸ்ரீ:

அருள்மாரியை யணைந்த ஆநந்தக்கூத்தன்

வையமெல்லாம் மறைவிளங்க வாள்வேலேந்தும் திருமங்கையாழ்வார், பொற்றாமரையாள் கேள்வனுக்குப் போகஸ்தானமெனப்படும் விண்ணவரும், மண்ணவரும் விரும்பும் வெற்பாகிய திருவேங்கடமலைக்குச் செல்லுகிறார். மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும் மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடத்துறை செல்வனைக் கண்ணாரக் கண்டு கையாரத் தொழுது, வாயார வாழ்த்துகிறார். சங்கொடுசக்கரம் வில் தண்டேந்தி யிடர்கடியும் மலையிலங்கு தோள் நான்கும், தூயதாமரைக் கண்களும், துவரிதழ் பவளவாயும், அந்திபோல் நிறத்தாடையும், அதன்மேல் அயனைப் படைத்ததோரெழில் உந்தியும், மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பும், மையும், மாகடலும், மயிலும், மாமழையும், மணிகளும் குவளையும் கொண்ட மெய்யும், செய்ய கதிர் நீண்முடியும், கண்டு உகந்து களித்துத் திளைக்கும் கலியன் தான் முன்பு இருந்த நிலையும், உலகளந்த பரமன் பழிப்பில்லாவருள் புரிந்து தன் இணையடிக்கீழ் குற்றேவல் புரிய அருள் புரிந்ததும்; வானவரும் அவர் தலைவனும் தானவரும், முனிவரும், மற்றும் எல்லோரும் தேடியும், பாடியும் காணாத சமலக் கண்ணன் தனக்கு விழியிலக்காகியதும் தான் வாள்வலியால் மந்திரங்கொண்டதும், இன்னும் அவன் இம்மலையின்கண் நின்றுகொண்டு தன்னைக் குளிர நோக்குவதையும் நினைந்து நைந்து உருகிக் கண்கள் நீர் சோர இந்தப் ப்ரக்ருதியைக் கடந்த ஓர் நிலையில் நிற்கிறார்.

ஆனால் அந்த நிலையிலும் பகவான் தன்னைப் பிரிந்து நிற்பதாக ஒரு தோற்றம் தோன்றியது போதும் கலிகன்றிக்கு. 'அடியேனை ஆட்கொண்டருளே' என்றிப்படிப் பலபாடல்களைத் தேனும் பாலும் கன்னலும் அமுதும் போலப் பாடுகிறார். அவ்வளவிலே பரமன் வந்து இவரோடு கலந்து ஆனந்தஸ்வரூபனாக நிற்கிறார். அவரையநுபவித்து ஆழ்வார் 'ஆயனடியல்லது மற்றறியேனே' 'இனி யானுன்னையென்றும் விடேனே' என்று பாடியிருக்கிறார்.

ஆழ்வாரும் அந்நிலையிலேயே நின்று பரமபுருஷனுடைய பாதகமலங்களுக்குக் குற்றேவல் செய்துகொண்டு அதோடு ஒன்றி அங்கேயேயிருந்திருப்பார். ஆனால் அப்படியாகிவிட்டால் தமிழ்நாடு உய்யுமோ. திவ்யதேசங்கள் நூற்றெட்டென்னும் பெயரும் ஏற்படாதே. பரமபுருஷன் எழுந்தருளியிருக்கும் பல திவ்ய தேசங்கள் அழிந்திருப்பினு மழிந்திருக்குமே. அப்படி அழிவதற்காகவா அந்த சார்ங்கம் ஆலிநாடனாக அவதரித்தது. ஆதலால் வாழ்விக்க வந்த வாமனன் வளர்புகழ்க் கலிகன்றியைத் திருவேங்கடத்திலேயே இருத்துவனோ? இல்லையில்லை ஒருக்காலுமில்லை. உலகுய்ய வந்த உத்தமனாகிய எம்பிரானும், ஓதக்கடலினும் போதம் மிக்க பரகாலனைத் தொண்டை நாடு, நடுநாடு, சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடுகளை மங்களாசாஸநம் செய்விக்கத் திருவுள்ளம் பற்றினார் போலும். ஆலிநாடரும் அதே கருத்தையுடையவர்தான். ஆனாலது தனக்கு முடியுமோ வென்றும் அஞ்சுகிறார். ஏனெனில் தம் நெஞ்சமும் தம் வசமல்லதாகிப் பரனுடைய சேவடிக்கீழ் அடிமைத் தொழில் பூண்டவ்விருப்பதினால் ஒரு பெருமை பெற்ற பெரிய பொன்களை பூண்டுவிட்டதுபோன்ற ஓர் உணர்ச்சியும் அதனின்றும் தான் மீள்வதென்பது இனி இயலாதென்னும் ஓர் உணர்ச்சியையும் அடைகிறார் அந்த அருள் மாரி. இருந்தாலும் அந்நிலையிலும் அந்தத் தம் நெஞ்சைக் குறித்துப் பெருமையே கொள்கிறார்.

அவ்வளவிலே தம் நெஞ்சை நோக்கி 'என்னுடைய நெஞ்சே! என் வசமல்லாது திருவேங்கடமுடையான் திருவடிக் கீழ் அமர்ந்து அடிமை புகுந்தாயே. என் அறிவுக்கெட்டாமல் நீ தற்போது அந்த அண்ணலிடத்திலறிந்த பெருமை யாது? அதை உரைத்திடுவாய்' எனக் கேட்கிறார். அந்நெஞ்சமும் அவனது பெருமைகளை, அதாவது தான் அப்போது அறிந்துகொண்டவைகளைச் சொல்லுகிறது

கேட்டார் கலியன். இவ்வளவுதானா அவன் பெருமை? ஏ நெஞ்சமே! நீ அவனைக் கூடியாடி அநுபவித்தாலும் இதற்கு முன்பு எந்தெந்தப் பெருமைகளைப்பற்றி யுரைத்தனரோ அவைகளையேதான் இப்போதுமுரைத்தாய். இருந்தாலும் இதற்கு முன் அவனைக் கூடியனுபவித்த நித்யஸூரிகள் யாது உரைத்தனரோ அதையேதான் நீயும் உரைத்தாய். மேலும் அக்குணக்குன்றமாம் கொற்றவனுடன் என்றுமெப்போதும் எங்கும் பிரியாது கூடியாடிக் குலவிக் களித்தருளும் பெரிய பிராட்டியார் யாது உரைத்தனளோ அதையே நீயுந்துணிந்துரைத்தனை. அவள் அகலகில்லேன் இறையுமென்றாள். நீயும் அகலாவடிமை பூண்டு என்றும் விடேன் என்று சொல்லுகிறாய். அந்த ஒருவிதத்திலே அவளுக்கும் உனக்கும் ஸாம்யம் உண்டு. ஆனால் நீ தனியாக அறிந்தது என்ன? என்கிறார். 'யான் இப்போதுதான் புதிதாக அடிமை புகுந்தவன். சிறிது காலம் சென்றால், செவ்வையாக அவனது ஸ்வரூபரூபகுணவிபவங்களை உள்ளபடி முழுமையும் அறிந்து சொல்லமாட்டேனா' என்றந்த நெஞ்சு சொல்லுகிறதுபோலும். ஆழ்வாரந்த நெஞ்சை விளித்து 'நீ என் வசப்படாமல் ஏதேதோ சொல்லுகிறாயே. ஓ என் நெஞ்சமென்று பெயருடையோய் நான் சொல்வதைத் துணிந்து கேள், எண்ணிறந்த பெரியோர் பலர் அவ்வண்ணலின் புகழை முக்காலமும் நின்று சலியாமல்பாடியும் அவ்வநுபவம்உள்ளடங்காமல் ஆடியும் அவன் பெருமையைச் சிறிதுமறிந்தார்களில்லையே' என்கிறார். அப்படி ஒருமனத்துடன் எப்போதுமவனைக் குறித்து ஆடியும் பாடியும் அவனை அறியகில்லாத பெரியோர்கள் யாவர்? என்று வினவுகிறதுபோலும் நெஞ்சு. அதற்கு அருளிச்செய்கிறார் கலியன்; 'பெருமாயனாகிய ஸர்வேச்வரனுடைய நாபீகமலத்தில் பிறந்து அப்புஷ்பப்படுக்கையிலே அதிஸூகந்ததாமரைப்பூத் தொட்டிலில்— ஆட்டி வளர்க்கப்பட்ட நான்முகன்— ஆழியானுடைய ஔரஸபுத்திரனாகிய சதுர்முகனும், ஸம்ஹாரகர்த்தாவென்றுபுகழ்பெற்ற ருத்திரனும் இன்னும் இந்திரனும் முதலியவர்களும் இதர வியாபாரங்கள் அனைத்தையும் விட்டு நின்று ஸ்தோத்திரம் செய்து கொண்டிருக்கிறார்களே, அப்படியிருந்தும் எம்பிரானை முற்றுங் கண்டறிந்தார்களில்லையே, என்று சொல்லுகிறார். இதைக் கேட்ட நெஞ்சம் 'அதை எல்லாம் நான் என் கவனிக்கவேண்டும்? வேங்கடமாமலை மேவி ஆநந்தக் கூத்தாடும் குடக்கூத்தனாகிய ஆநந்தஸ்வரூபனுக்கு நானடிமை பூண்டேன். அவனுக்கடிமை புகுவதுவே எனக்கும் ஆநந்தமானது' என்றது. அதைக்கேட்ட ஆழ்வார், 'நெஞ்சமே நல்லை நல்லை. நீ மஹிமையுள்ளவனை யறிந்து அடிமைப் பட்டனையே. அவனடிமையை உகந்தனையே. இப்பேறு இலேசில் கிடைக்கப் பெறுமா? இதைப் பெற்ற உன் பெருமை அளவிடமுடியுமோ? உன்னைச் சொந்த நெஞ்சமாகப் பெற்ற நானே பாக்கியவான். இப்பெருமையையுடைய ஓர் நன்னெஞ்சையுடைய ஆத்மாவாகிய ஒப்பற்ற மாமணி— தனக்கே சொந்தமாகிய ஓர் செழுமணி— தன்னை வந்தடைந்ததே என்ற ஆனந்தத்தினாலல்லவோ அவ்வேங்கடத்தானும் ஆனந்தக் கூத்தாடுகிறான், என்று விபந்தனுபவிக்கிறார் நாலுகவிப் பெருமாள். அவருடைய அநுபவம் நிறைந்த அந்தக் திருப்பாசுரம் நமது பாக்கியத்தின் பயனாக இன்னும் சிரஞ்சீவியாகத்தான் திகழ்கிறது. அது வருமாறு:—

'கூடியாடி உரைத்ததே யுரைத்தாய்
என்னெஞ்சமென்பாய் துணிந்து கேள்
பாடியாடிப்பலரும் பணிந்தேத்திக் காண்கிலார்
ஆடுதாமரையோனும் ஈசனும் அமரர்கோனும்
நின்றேத்தும் வேங்கடத்தாடு கூத்தனுக்கின்
றடிமைத் தொழில் பூண்டாயே.

குறிப்பு:— கூடியாடி உரைத்ததே உரைத்தாய் (முன்) உரைத்ததையே கூடியாடிய பிறகும் உரைத்தாய், முன் கூடியாடிய (ஸூரிகள்) உரைத்ததையே நீயும் உரைத்தாய், கூடியாடிய பெரிய பிராட்டியார் உரைத்ததையே நீயும் உரைத்தாய்; (இவ்விடத்தில் ஆடி

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் தேவப்பெருமாள் மங்களாசாஸநம்

ஸ்ரீ அழகியசிங்கர் பட்டாபிஷேகம் ஆன தினம்தான் திருவள்ளூரில் ஸ்ரீ வீரராகவனை மங்களாசாஸநம் செய்தருளியாயிற்று. ஸ்ரீ இஞ்சிமேட்டழகியசிங்கர் திருமேனியில் நோவு சாற்றிக் கொண்டாயிற்று. பிணியும் ஒழியாமல் பெருகிக்கொண்டு வருவதைப் பார்த்து ஸ்ரீ அழகியசிங்கர் திருவள்ளூரிலேயே எழுந்தருளியிருந்தும் தம் மனோரதப்படி பெருமாளை மங்களாசாஸநம் பண்ணமுடியாமலிருப்பதைக் காட்டி குறைப்பட்டு ஸாதிப்பதை அடிக்கடி கேட்டிருந்தபடியால் சாஸ்த்ரஸம்மதமான ரீதியில் நடத்தவேண்டியதை நடத்தித் திருவுள்ளமுகந்து ஸ்ரீ அழகியசிங்கர் பரமபதத்திற்கு எழுந்தருளிவிட்டால் ஸ்ரீ ராகவன் மரியாதைகள் குறைவில்லாமல் நடக்கும்படி ஏற்பாடு செய்தருளியாயிற்று. அந்தப்படியே ஸ்ரீ அழகியசிங்கர்கள் திருநாட்டுக்கு எழுந்தருளினால் நடக்கவேண்டிய ஸ்ரீராகவன் ஸந்நிதி மரியாதைக்ரமங்களெல்லாம் ஸ்ரீ இஞ்சிமேட்டழகியசிங்கருக்கு குறைவற நடந்தன. பட்டாபிஷேக தினத்தன்றும் ஸ்ரீ அழகியசிங்கர் மங்களாசாஸநம் குறைவற நடந்தது. பிறகு ஸஞ்சாரமாய் எழுந்தருளின காலத்தில் திருவல்லிக்கேணி மங்களாசாஸநம் பண்ணத் திருவுள்ளம் பற்றவில்லை. பிறகு நீரளூர் கிராமத்தில் 5-நாள் எழுந்தருளியிருந்தகாலத்தில் ஸ்ரீதேவப்பெருமாள்மங்களாசாஸநம் நடக்கக்கூடுமென்று சிலர் எதிர்பார்த்தார்கள். சிலமுக்யஸ்தர்கள் ப்ரார்த்திக்கவும் செய்தார்கள். திருவுள்ளம் பற்றியாகவில்லை. பிறகும் அதே மாதிரியே ஸஞ்சாரங்களில்கோயில் மங்களாசாஸநங்களைப் ப்ரார்த்திக்கிறவர்களுக்கெல்லாம் 'அந்தந்த திவ்யதேசத் தெம்பெருமான்கள் ஸங்கல்பித்தால் நடக்கும்' என்றும் 'அது விஷயங்களை நிமித்தாதிகளைக்கொண்டறியலா' மென்றும் ஸாதிக்கும்படியாயிருந்தது. தைநந்தினமான எல்லா கார்யங்களையும்அதிலும் விப்ரதிபத்தியால்ஸந்திக்தமான விஷயங்களையும் அவ்வப்போது விசேஷித்து ஏற்படும் நியமனத்தாலேயேதான் செய்துவருவதாக ஸாதிக்கிற ரீதியில் இதையும் குறிப்பிட்டுஸாதித்தருள்வது பொருத்தமேயென்று அவர்கள் எண்ணிப் போந்தார்கள். அதின் யாதார்த்யத்தை ஆங்காங்கு நடந்த மங்களாசாஸநத்தின் முன்பின் நடந்த வரலாறுகளைக்கேட்டுணர்ந்து அறியலாம்.

இப்போதும் வந்தவாசி ஸஞ்சாரகாலத்திலிருந்தே ஸ்ரீதேவப்பெருமாள் மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளவேணுமென்றும்திருவுள்ளமுகக்கும்படி எல்லாம் நடக்கும் என்றும், சொல்லிவந்தார்கள். அவ்வமயம் எழுந்தருளுவதாகத் திருவுள்ளம் பற்றியாகவில்லை. புரிசையில் எழுந்தருளியிருக்கும்போது அவ்வூரைச் சேர்ந்தவரும், தூப்புல் தேசிகன் உத்ஸவாதிகளில் வ்யாப்ருதருமான ஸ்ரீதாசரதி என்பவர் 'தேவப்பெருமாள் மங்களாசாஸனம் பண்ணினாலும் பண்ணாவிட்டாலும் தூப்புல் தேசிகன், விளக்கொளி எம்பெருமான், மங்களாசாஸனம் பண்ணித்தான் ஆகவேணும்என்றும், 'திருவுள்ளம் உகக்கும்படி நாங்கள் நடத்துகிறோம்' என்றும் விஜ்ஞாபித்துப் போனார். அதையும் அப்போது அங்கீகரித்தாகவில்லை.

ஸ்ரீஸந்நிதியில் காலையில் ஸேவாகாலம் ஆன பிறகு ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரபாராயணம் நடந்துவருகிறது. ஒரொரு நிமித்தங்களால்ஆரம்பிக்கப்பட்டு தசாவதாரஸ்தோத்ரம், பகவத்யாநஸோபாநம், அபீதிஸ்தவம், இவைகளானபிறகு ஸஹஸ்ரநாம பாராயணம் நடந்து வருகிறது. காமாஸிகாஷ்டகத்தையும் அநுஸந்திக்கவேணும்' என்று ப்ரார்த்தித்தார்கள்.

என்பது இதர வீறு பெற்ற பெண்பாற்பெயர்) துணிந்து என்பதை உரைத்தாய் என்பதுடனும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். ஆடு- பரிமளம் மிகுந்த, ஆடுகின்ற; நின்றேத்தும்- வேறு விஷயங்களைக் கவனியாமல் நிலையாய் நின்றேத்துகின்ற (இது முக்காலத்திற்கும் பொது) தாமரையோனுக்கும் ஈசனுக்கும் காண்கொடுக்காமல் ஆடுகிறார் ஆனந்தமயனாகிய அம்மாயக் கூத்தன்.

வரதராஜஸ்தவம், பஞ்சாசத் முதலியதுகளில் வரதவாசக பதங்களின் ஸ்தானத்தில் 'நரஸிம்ஹவாசக பதங்களை' ஊஹித்துத் தாம் அநுஸந்திக்கும் க்ரமத்தில் காமாஸிகாஷ்டகத்தையும் தாம் பட்டில் தினம் அநுஸந்தித்து வருவதாக ஸாதித்து அப்படி அநுஸந்திக்கும் ச்லோகத்தை அநுஸந்தித்துக்காட்டியாயிற்று. தஞ்சாவூர் வக்கீல் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் அவ்வநுஸந்தாநப்படியே காமாஸிகாஷ்டகத்தையநுஸந்திக்க இன்றே நியமனமாகவேணுமென்று ப்ரார்த்தித்தார். 'அவன் திருவுள்ளத்தில் பட்டபோது அநுஸந்திக்க நியமித்து நடத்துவன்' என்று அப்போது ஸாதித்தாயிற்று. இது நடந்தது தஞ்சாவூர் ஸஞ்சார காலத்தில். இதைத் தொடர்ந்தே ஆங்காங்கு நடக்கும் ஸ்ரீ ஸந்நிதி பாடசாலைகளில் ஆரம்ப ப்ரார்த்தனையின் போது பையன்கள் அநுஸந்திக்கும்படி அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க அச்சு போடவேணுமென்ற ப்ரார்த்தனையை மட்டில் அங்கீகரித்தாயிற்று. பாதூரிலெழுந்தருளியிருக்கும்போது அதை யச்சிட்டு ஸமர்ப்பித்தார்கள். பிறகு நங்கமங்கலத்தில் எழுந்தருளியிருக்கும்போதுதான் பெருமாள் நியமநமாகியிருப்பதாக ஸாதித்து நித்யம் அநுஸந்திக்கும்படி நியமித்தாயிற்று.

தாமல் எழுந்தருளியிருந்த காலத்தில் தூப்புலுக்கு எழுந்தருளவேணுமென்று தூப்புல் ஸந்நிதி டிரஸ்டி ஸ்ரீமான் வெங்கடேசமுதலியாரை முன்னிட்டுக்கொண்டு ப்ரார்த்தித்தார்கள். அவருடன் வந்த தேவராஜஸ்வாமி கோவில் டிரஸ்டி ஸ்ரீ ஸுதர்சந தாதாசாரியார் தூப்புல் எழுந்தருளி ஸ்ரீ தேவாதிராஜன் மங்களாசாஸநம் பண்ணாமல் போகக் கூடாது, ஸ்ரீ தேசிகன் மங்களாசாஸனம் இவ்வருஷம் நடக்காமல் போய்விட்டதற்காகக் குறைப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஸ்ரீ அழகியசிங்கரும் மங்களாசாஸனம் பண்ணாமல் போய்விட்டால் எங்களுக்கு மனவருத்தமும் அஸந்துஷ்டியும் ஏற்படும். திருள்ளப்படி குறைவில்லாமல் எல்லாம் நடக்கும். பூர்வாச்ரமத்தில் பித்ருபிதாமஹாதிகள் குடிகுடியாக எம்பெருமானுக்கு கைங்கர்யங்களையும் செய்து அநுபவித்த எம்பெருமானுடைய மங்களாசாஸனத்தை இந்த ஸமயம் தவிர்க்கக் கூடாதென்றும் அவனே இவ்விடத்தில் திருவுள்ளத்துக்குப் பாங்காக நடத்திக்கொள்வானென்றும், ப்ரார்த்தித்தார். அவரையநுஸரித்து அவ்வூராரும் பொய்கைப்பாக்கம் ஸ்ரீ கோபாலாசாரியார் முதலியவர்களும் ப்ரார்த்தித்தார்கள். தாமலிலிருந்தே எழுந்தருளவேணுமென்றும் விஜ்ஞாபித்தார்கள். நீரளூர் வாஸிகள் தங்களூருக்கு பெருமாள் எழுந்தருளவேணும் என்று விஜ்ஞாபித்தபடி நீரளூருக்கே எழுந்தருளினர். அங்கிருந்து தூசி அக்ரஹாரவாஸிகள் தங்களூருக்கெழுந்தருளும்படி ப்ரார்த்தித்ததை அங்கீகரித்து எழுந்தருளியாயிற்று. தூப்புல் ஸமீபமாகவே தூசிக்கு எழுந்தருளவேண்டியிருப்பதால் காஞ்சீபுரத்திற்குள்ளே போய்விட்டு பெருமாள், தேசிகன், மங்களாசாஸனம் பண்ணாமல் போகக்கூடாது என்று கூட இருந்தவர்கள் விஜ்ஞாபனம் பண்ணியும், தூசிக்கு வருவதாகச் சொல்லிவிட்டபடியால் அங்கு எழுந்தருளுவதாக ஸாதித்தாயிற்று. இந்த விஷயம் காஞ்சீபுரவாஸிகளுக்குத் தெரிந்து எல்லோரும் தனி பஸ் வைத்துக்கொண்டு ராத்ரி ஸஞ்சாரம் நடக்கும்போது மணி 12-க்கு ராஜகுளம்ஸமீபம் வழியில் பல்லக்கை நிறுத்தி தெண்டம் ஸமர்ப்பித்துப் ப்ரார்த்தித்தார்கள். கடைசியாக தூசியிலிருந்தாவது எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்துவிட்டு தூப்புல் வரையில் வந்து தூசிக்கு வழியனுப்பிவிட்டுப் போனார்கள். தூப்புல் ஸந்நிதி டிரஸ்டி ஸ்ரீமான் வெங்கடேசமுதலியாரும் விசேஷமாகப் ப்ரார்த்தித்துவிட்டுப் போனார். தூசிக்கு ஸ்ரீ தாசரதி மத்யாஹ்நம் வந்து ப்ரார்த்தித்தபோது 'காஞ்சீபுரம் தாண்டிவந்துவிட்டபடியால் மறுபடியும் காஞ்சீபுரம் ஸமீபம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்' என்றும் 'இது விஷயத்தை டிரஸ்டியிடமும் மற்றும் ஊராரிடமும் சொல்லிவிடும்படியும் ஸாதித்தாயிற்று. பானகாராதனத்துக் கெழுந்தருளி ஆராதனம் நடக்கும்போது தூப்புல் ஸந்நிதி டிரஸ்டி ஸ்ரீமான் வெங்கடேசமுதலியார் மற்றொரு டிரஸ்டியையும் மற்றும் பலப்ரமுகர்களையும் அழைத்துக்கொண்டு வந்தார். அதுவிஷயம் ஸ்ரீ ஸந்நிதிக்கு பாராயணம் நடக்கும் போது தெரிந்தது. சாயங்காலமே மாமண்டூ

ருக்கு அன்று ராத்திரி புறப்பட்டு எழுந்தருளுவதாக அவ்வூராருக்குத் தெரிவித்திருந்தபடியால் அவர்கள் ஸங்கத்தர்களாக வந்திருந்தார்கள். பாராயணம் முடிந்து சாற்றுமுறை கோஷ்டியாகி ஆச்ரமத்திற்கெழுந்தருளியானதும் தூப்புல் டிரஸ்டிகள் ‘தூப்புலுக்கு அவச்யம் எழுந்தருளித்தான் ஆகவேணும், பெருமாளை வேறு ஊருக்கு எழுந்தருளப் பண்ணினால் நாங்கள் ஸத்யாக்ரஹம் செய்வோம், தூப்புலிலேயே ஸ்ரீ தேசிகன் ஸந்நிதி வடவண்டைப்ராகாரத்தில் பெருமாளை எழுந்தருளப் பண்ணி அபிகமநாராதனமாவது செய்துவிட்டு ஸ்ரீ தேசிகன் விளக்கொளி எம்பெருமானிவர்களை மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு அப்புறம் இஷ்டப்படி எழுந்தருளலாம். எங்கள் ஆதீனத்தில் (பரிபாலனத்தில்) உள்ள ஸ்ரீதேசிகன் ஸந்நிதியில் பெருமாளை எழுந்தருளப் பண்ணி எங்களாலியன்ற அளவு ஆராதிக்க ஆசைப்பட்டால் மற்ற இடங்களுக்கெழுந்தருளுவதுபோல ஏன் எழுந்தருளக்கூடாது? எங்கள் மனோரதமும் பூர்த்தியாகிறது. திருவுள்ளத்தில் குறையில்லாமல் திருவுள்ளப்படி மங்களாசாஸனமும் நடக்கிறது’ என்று ப்ரார்த்தித்தார்கள். ‘அவருடைய’ வெங்கடேசமுதலியார் என்கிறபெயரையும்அவர் ஒரேபிடிவாதமாக ப்ரார்த்திப்பதையும் பார்த்து இதுதான் ‘ஸ்ரீ தேசிகன் நியமனம் என்று கொள்ளவேணும், காமாஸிகாஷ்டகத்தை ஸ்ரீ அஹோபிலாதீசன் விஷயமாக அநுஸந்திப்பதை ஸ்ரீதேசிகன் திருவுள்ளமுகந்து தம்முடைய அஸாதாரணமான ஸந்நிதியில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி ஆராதனம்நடத்தி ஸேவையையும், ஸ்தோத்ரவேதபாராயணங்களையும், தன்னையாச்ரயித்தவர்களைக்கொண்டு நடத்தி, காமாஸிகாஷ்டகத்தையும் திருச்செவிசாத்தி, ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் பண்ணத் திருவுள்ளம்பற்றி நியமிக்கிறபடி என்று ஸாதித்து தூப்புல் எழுந்தருளுவதாக ஸாதித்தாயிற்று. அதை அவர் ஊர்ஜிதம் செய்துகொண்டபிறகே போய் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகப் புறப்பட்டுப் போனார். அந்தப்படியே ராத்திரி தூப்புல் எழுந்தருளினார். தூப்புல் எழுந்தருளின விஷயம் ஸ்ரீ தேவராஜஸ்வாமி தேவஸ்தான டிரஸ்டிகளுக்கும் மற்றுமங்குள்ளவர்களுக்குந் தெரிந்து ஸ்ரீ ஸந்நிதிக்கு வந்து மறுநாள் ஸ்ரீ தேசிகன் தீபப்ரகாசன் இவர்கள் மங்களாசாஸனமானதும் அங்கிருந்தே ஸ்ரீ தேவப்பெருமாள் ஸந்நிதிக்கும் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்துவிட்டு பிறகு க்ரமமாக மடத்திற்கெழுந்தருளலாம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இப்போதே போய் செய்வதாய் விஜ்ஞாபித்துப் போனார்கள். ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியில் வடவண்டைப்ராகாரத்தில் கிழக்குமுகமாக வெள்ளி மண்டபத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருந்து விச்வரூபம், அபிகமனம், ஸேவை ஸ்தோத்ரவேதபாராயணங்கள், சாற்றுமுறை முதலியதுகள் யதாக்ரமம் நடந்தது. ஸமாச்ரயணபரந்யாஸங்களும் நடந்தது. பிறகு பெருமாளை தங்கப்பல்க்கில் எழுந்தருளப்பண்ண நியமித்துவிட்டு, பெரியமாலை, வெண்பட்டு, (ஸிதாஞ்சலீய) ஜரிகை தகடி இதுகளுடன் தூப்புல் தேசிகன் எழுந்தருளியுள்ள இடமெழுந்தருளி அவைகளை ஸமர்ப்பித்து பிள்ளையந்தாதி அநுஸந்தாநத்துடன் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. கருடோத்ஸவத்தன்று தூப்புல் ஸந்நிதியில் நடக்கும் மரியாதைகளை சுருங்கக் காட்டினதாக இருந்தது. அவ்விடத்தில் தேசிகனுடைய மரியாதைகளை யதாக்ரமம் பெற்றுக்கொண்டு அங்கிருந்து தீபப்ரகாசன் ஸந்நிதிக்கெழுந்தருளியாயிற்று. கோபுரவாசலில் ஸ்ரீ சடாரி முதலிய மரியாதைகளுடன் கோயில் பரிஜனங்கள் வந்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போனார்கள். தீபப்ரகாசனுக்கும் பீதாம்பரம் ஸமர்ப்பித்து தீபப்ரகாசன், தாயார் இவர்களை மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. மறுபடி தூப்புல் ஸந்நிதிக்கெழுந்தருளி பெருமாளுடன் காஞ்சீபுரத்திற்குப் புறப்பட்டாயிற்று. தந்தப்பல்லக்கை தூப்புல் ஸந்நிதி வாசலில் அலங்கரித்து அங்கிருந்தே தந்தப்பல்லக்கில் எழுந்தருளியாக வேண்டுமென்றும், தேசிகன் மங்களாசாஸனத்திற்கெழுந்தருளும்போது அங்கிருந்து தங்கப்பல்லக்கில் எழுந்தருளுவது வழக்கம் என்றும், அந்தமாதிரி எழுந்தருளினால்தான் எங்களுக்காறுதலாயிருக்கும், என்றும் அங்குள்ளவர்கள் ப்ரார்த்தித்துக்கொண்டபடி அப்படியே ஸந்நிதியினுடையவும் கோயிலினுடையவும் எல்லா

பிருதுகளுடன் எழுந்தருளி யதோக்தகாரி ஸந்நிதி வழியாக தேப்பெருமாள் ஸந்நிதிக்கெழுந்தருளியாயிற்று. 16-கால் மண்டபத்தில் வழக்கப்படி ஸ்ரீ சடாரியுடன் கோயில் அதிகாரிகள் வந்து .திருவுள்ளமுகக்கும்படி எல்லாம் ஸந்நத்தமாக இருக்கிறது எழுந்தருளவேணும்' என்று ப்ரார்த்தித்து மரியாதைகளை செய்து வைத்தார்கள். அங்கிருந்து ஸ்ரீ சடாரியின் அநுயாத்ரையாக கூடவே எழுந்தருளி அநந்தஸரஸ்ஸில் ஆசமநாதிகள் செய்து நூற்றுக்கால் மண்டபம் வழியாக எழுந்தருளியாயிற்று. ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனால் நிர்மாணிக்கப்பட்ட நூற்றுக்கால் மண்டபத்தில் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் கண்ணனும் பல்லக்குடன் எழுந்தருளியிருப்பதை அசமகிழ்ந்து வலம் செய்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நியமனம் பெற்றுக்கொண்டு உள்ளே எழுந்தருளியாயிற்று. யதாக்ரமம் தாயார் ஸந்நிதிக்கெழுந்தருளி தாயாருக்கு உயர்ந்த ஜரிகை சித்ராடை ஸமர்ப்பித்துவிட்டு மங்களாசாஸனம் செய்து யதாக்ரமம் மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து கருமாணிக்கவரதன் ஸந்நிதி வலமாக திருமடப்பள்ளி ப்ரதக்ஷிணம் வந்து கோபுரவாசலுக்கெழுந்தருளியயிற்று. ந்ருஸிம்ஹகுஹையுடனிருக்கும் அத்திகிரியடியானை மங்களாசாஸனம் செய்து மலைக்கெழுந்தருளி யதாக்ரமம் அம்மாள் கோஷ்டியை தண்டனிட்டு உள்ளே எழுந்தருளி விசேஷ சகடி ஸமர்ப்பித்து பெருமாளை மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. பெருமாள் வெங்கடாத்ரி கொண்டையுடனும் விசேஷாபரணங்களுடனும் ஒரு பாரிப்போடு எழுந்தருளியிருப்பதாகநினைக்கும்படிகுளிர்ந்தநோக்கோடு எழுந்தருளியிருந்தார். யதாக்ரமம் மரியாதைகள் எல்லாம் நடந்து கோஷ்டியாக வரதராஜபஞ்சாசத் அநுஸந்தானத்துடன் மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. அந்த ஸம்ருத்தியை நோக்கி 'வாழியருளாளர்' என்கிற பாசுரத்தாலே உச்சைஸ்வரத்தில் ஆரம்பித்து கத்கத த்வநியுடன் மங்ளாசாஸனம்செய்தருளும்படியாயிருந்தது யதாக்ரமம் மரியாதைகள் ஆனவுடன் ப்ரதக்ஷிணமாக மலையிலிருந்து இறங்கி ஸ்ரீ தேசிகனை மங்களாசாஸனம்பண்ணிக்கொண்டுவஸந்தமண்டபத்தையும் கடாக்ஷித்தாயிற்று. அங்கு 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் இதே ஜனவரி 24-ம் தேதியில் 1943-வது ஹூ அதாவது சித்ரபானு ஹூ மங்களாசாஸனம் செய்யும்படி இருந்தது. இன்றும் அதே தேதியாயிருப்பது விசேஷம் என்று அப்பொழுது பிடித்த படத்தையும் காண்பித்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு மாடவீதிகள் வலமாக மடத்திற்கெழுந்தருளினர். ஸ்ரீ தேசிகன் மங்களாசாஸனம் இவ்வருஷம் புரட்டாசி மாதத்தில் நடைபெறவில்லை. அதை ஜ்ஞாபகப்படுத்துகிறதாக இருக்கிறது இப்பொழுது ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளின மங்களாசாஸனம் என்று எல்லோரும் ஸந்தோஷத்துடன் விஜ்ஞாபித்தார்கள். 'யான் ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்' என்கிறபடி இருந்தும் 'மதீயபாவாதிமசிந்தயித்வா பித்ருந்விலோக்ய ஹ்யகரோத் ப்ரஸாதம்' என்று அநுஸந்திக்கும்படி பண்ணிவைத்தான். 'ப்ரஸீத' என்ற ப்ரார்த்தனையையும் அபேக்ஷித்திலன். ஸூத்ராநுபத்த சகுநிக்ரமம்கூட இல்லாமல் 'மறப்பும் ஜ்ஞாநமும் நானொன்றுணர்ந்திலன்' என்கிறபடி அசித்கல்பனை என்னை ஆதாரஸ்பதனாகப் பண்ணிக்கொண்டவனுடைய காருண்யத்தையும் ஸௌசீல்யத்தையும் என்ன சொல்வதென்று ஸாதித்துவிட்டு 'த்வமேவ மயி சக்த்யதிகாரவாஞ்சா: ப்ரத்யூஹசாந்திமிதரச்ச விதேஹி விச்வம்' என்ற ஆழ்வான் அநுஸந்தாநம் தன்னிடம் பலித்ததாகவும் ஸாதித்தாயிற்று. ஆக இப்படி நடந்த தேவப்பெருமாள் மங்களாசாஸநத்தில் ஏற்பட்ட அநுபவ பரீவாஹமாகவே இது வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த அநுபவத்தை அப்போது ஸந்நிஹிதர்களான எல்லோரும் அநுபவித்திருந்தாலும் அந்த அநுபவம் உள்ளடங்காமல் அடியேன் மூலமாக தானாகவே இதன் மூலம் ப்ரவஹித்தது என்றுகூட சொல்லலாம்

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

12–2–56 அன்று மத்யாஹ்நம் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலையில் ததீயாராதனம் ஆனபிறகு 4- மணிக்கு அடுத்த தெருவிலிருக்கும் ஸ்ரீ. ஈ. என். ரங்காச்சாரியார் ஆத்துக்கு பெருமாளும், ஸ்ரீ அழகியசிங்கரும் எழுந்தருளினார்கள். அவர் யதாசக்தி ஆராதித்தார். இராத்திரி டோலோத்ஸவமும் நடந்தது. இராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 15- மைல் தூரமுள்ள மதூருக்கு எழுந்தருளினார். ஊர்வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரை உத்ஸாஹத்துடன் வரவேற்று திருமஞ்சனமும் ராத்திரி டோலோத்ஸவமும் பண்ணிவைத்து மறுநாளும் ஆராதித்தார்கள். 14–2–56 இராத்திரி திருவாராதனமானதும் 9- மணிக்குப் புறப்பட்டு 6- மைல் தூரமுள்ள பாதிரிக்கெழுந்தருளினார். 15–2–56 அன்று தசாவதாரமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று இராத்திரி 9- மணிக்குப் புறப்பட்டு 6- மைல் தூரமுள்ள கீழ்ப்பாக்கம் எழுந்தருளினார். 16–2–56 அன்று அவ்வூரார்கள் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று இராத்திரி 10- மணிக்குப் புறப்பட்டு 3- மைல் தூரமுள்ள விளாங்காட்டுக்கெழுந்தருளினார். அவ்வூர் ஸ்ரீ சேஷாசாரியாரும் ஸ்ரீ துரைஸாமி ஐயங்காருமாராதித்தார்கள். இராத்திரி டோலோத்ஸவமும் நடந்தது. 17–2–56 அன்று இராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள மேல்நர்மாவுக்கு எழுந்தருளினார். அவ்வூர் துரைஸாமி அய்யங்கார் அவர் குமாரர்களுடன் யதாசக்தி ஆராதித்தார். 18–2–56 இராத்திரி புறப்பட்டு 2- மைல் தூரமுள்ள ஸவுந்திரிபுரம் எழுந்தருளினார். 19–2–56 ல் அவ்வூர் வாஸியான ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியர் முதலானவர்கள் தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்று இராத்திரி புறப்பட்டு 8- மைல் தூரமுள்ள மேல்மாவுக்கு எழுந்தருளினார். 20–2–56 அன்று அவ்வூர் வாஸிகள் தசாவதாரமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்றுராத்திரி 10- மணிக்குப் புறப்பட்டு 9- மைல் தூரமுள்ள மேல்பாக்கமெழுந்தருளினார். 21–2–56 அன்று ஸ்ரீ நரஸிம்ஹாச்சாரியார் அவர் தமையன்கள் முதலியவர்கள் தசாவதாரமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். அவ்விடம் உளுந்தையிலிருப்பவர்கள், வந்து கீழ்ப்பாக்கம் எழுந்தருளும்போது நிர்பந்தமாக நாங்கள் ப்ரார்த்திக்காமல் போனது தவறுதலாகப்போய்விட்டது. இப்பொழுது பெருமாள் கட்டாயம் எழுந்தருளவேணும் என்று ப்ரார்த்தித்தார்கள். ராவத்தநல்லூர் ஸ்ரீ திருவேங்கிடாச்சார் முதலியவர்கள் தங்களூருக்கு அவசியம் எழுந்தருளவேணுமென்று பிரார்த்திக்க அன்று இராத்திரி புறப்பட்டு 2- மைல் தூரமுள்ள ராவத்தநல்லூர் எழுந்தருளினார். 22–2–56 அன்று தசாவதார மண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார்கள். அன்று 42- வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் கைங்கர்யத்திற்காக வேதப்ரபந்த பாராயணம் உபக்ரமிக்கப்பட்டது. 23–2–56 துவாதசியன்றும் அங்கேயே எழுந்தருளியாயிற்று. இரண்டு நாட்களும் ஊரார்கள் யதாசக்தி ஆராதித்தார்கள். 23–2–56 ராவத்தநல்லூரிலிருந்து புறப்பட்டு 15- மைல் தூரமுள்ள உளுந்தைக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் வாணவேடிக்கைகளுடன் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று ஆராதித்தார்கள். மறுநாளுமங்கேயே எழுந்தருளியிருந்தபடியால் மறுநாளும் ஊரார்களே யதாசக்தி ஆராதித்தார்கள். 25–2–56 இராத்திரி உளுந்தையிலிருந்து புறப்பட்டு 9- மைல் தூரமுள்ள உத்திரமேரூருக்கு எழுந்தருளினார். ஏற்கனவே அவர்கள் பூர்ணமாக ஆராதித்திருந்தும் 26–2–56 அன்றும் யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று 42-வது

பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் மூன்ருவது வருஷாராதன கைங்கர்யம் வேதபாராயணப்ரபந்த சாற்றுமுறைகளுடன் நன்கு நடந்தது. 26-2-56 இராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 14 மைல் தூரமுள்ள வளையபுத்தூருக்கு எழுந்தருளினர். 27-2-56 அன்று ஸ்ரீ துரைஸாமி அய்யங்கார் ஸ்ரீ ஸம்பத்குமாராச்சார் முதலியவர்கள் தசாவதாரமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். அன்று இராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 15- தூரமுள்ள அன்னூருக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகளான ஸ்ரீ ராஜகோபாலாசாரியார் முதலியவர்கள் அவ்வூர் வாஸியான ரங்கநாயகி அம்மாளின் ஸகாயத்தினல் திருமஞ்சனம் பண்ணி இரண்டு நாட்கள் பூர்ணமாயாராதித்தார்கள். 29-2-56 அன்று இராத்திரி அன்னூரை விட்டுப் புறப்பட்டு 6- மைல் தூரமுள்ள கடங்கரைக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகளான ஸ்ரீ விஜயராகவாச்சாரியார், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் முதலானவர்கள் பிரபல நாயுடுகளுடைய ஸகாயத்துடன் யதாசக்தி ஆராதித்தார்கள். 1-3-56 அன்று இராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 17- மைல் தூரமுள்ள மலையாங்குளத்துக்கு எழுந்தருளினர். அக்ரஹாரவாஸிகள் வாணவேடிக்கைகளுடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று இரண்டு நாட்கள் பூர்ணமாய் ஆராதித்தார்கள். 2-3-56 அன்று ஸ்வாதியானபடியாலும் கோயம்புத்தூரிலிருந்து ஆதனூர் உப்புலி அய்யங்கார் குமாரர் ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் முன்னமேயே க்ருஹப்ரவேசத்தை முன்னிட்டு ஸ்வாதி அன்று பெருமாளுக்கு (எல்லா திவ்ய தேசதெம்பெருமான்களுக்கும்) திருமஞ்சனம் கண்டருளப்பண்ணவேணுமென்று ஸ்ரீ ஸந்நிதியில் பத்ரிகாமூலமாய் விஜ்ஞாபித்திருந்தபடியால் அந்தப்படி திருமஞ்சனம் நடந்தது. 31-2-56 அன்று ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் முதலியவர்கள் டோலோத்ஸவம்பண்ணி வைத்தார்கள். அன்றிரவு புறப்பட்டு 12மைல் தூரமுள்ள களக்காட்டூருக்கு எழுந்தருளினர். மார்க்கத்தில் பேரமல்லூர் ஸ்ரீ வரததேசிகாச்சாரியர் முதலியவர்கள் தங்கள் அக்ரஹாரத்துக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளிவிட்டுப் போகவேணும் என்று பூர்ணகும்பத்துடன் பிரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாளுடன் அவர்களுடைய பிரார்த்தனைக்கு இணங்கி பேரமல்லூர் அக்ரஹாரத்துக்கு எழுந்தருளினர். அக்ரஹாரவாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு க்ருஹங்கள் தோறும் உபஹாரங்கள் ஸமர்ப்பிவித்து தனித்து ஸம்பாவனையும் விசேஷமாகப் பண்ணினர்கள். களக்காட்டூர் ஸ்ரீ விஜயராகவாசார் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று 4-3-56 அன்று பெருமாளை எழுந்தருளப் பண்ணி ஆராதித்தார்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 15 மைல் தூரமுள்ள பழையசிவரமெழுந்தருளினர். ஸ்ரீ ஸ்ரீநிவாஸாச்சாரியர் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று ஆராதித்தார்கள். ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸனம் பண்ணவேண்டுமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் உகக்கும்படி நடத்திவைக்கிறோமென்றும் பிரார்த்திக்க, ஸ்ரீ அழகியசிங்கரும் மத்யாஹ்னம் இஜ்யை திருவாராதனம் ஆனதும் தங்கப்பல்லக்கில் பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு மலைக்கெழுந்தருளினர். அங்கு மலைமேலிருக்கும் மண்டபத்தில் கனுபார்வேட்டைக்கு ஸாயங்காலம் தேவப்பெருமாள் எழுந்தருளுகிறது மாதிரி தங்கப்பல்லக்கில் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் ஸாயங்காலம் திருவாராதனம் நடந்தது. ராத்திரி மலையிலிருந்து ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாளும் எழுந்தருளுகிற ஸேவையை ஸேவிக்க பக்கத்து ஊர்களிலிருந்தும் அநேகம் பேர் வந்திருந்தார்கள். எல்லா ஜனங்களும் ஆனந்தபரவசமானர்கள். அன்று டோலோத்ஸவமும் நடந்தது. 5-3-56 அன்று ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள செங்கல்பட்டுக்கு எழுந்தருளினர். 6-3-56 அன்று வக்கீல், பிள்ளைப்பாக்கம், ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் முதலியவர்கள் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யங்கார் க்ருஹத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி டோலோத்ஸவமும் பண்ணி இரண்டு தினங்கள் பூர்ணமாயாராதித்தார்கள். மறுநாளும் ஸ்ரீ பட்ஸாமி அய்யங்கார் டோலோத்ஸவம் பண்ணிவைத்

தார். 7-3-56 அங்கிருந்து புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள மெய்யூருக்கெழுந்தருளினர். ஏகாதசியன்று ஸ்ரீ ரங்காசாரியரும் அவர் குமாரர் ஸ்ரீவீரராகவாசாரியரும் தசாவதாரமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி யதாசக்தி ஆராதித்தார்கள். 8-3-56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள பொன்விளைந்தகளத்தூருக்கு எழுந்தருளினர். 9-3-56 அன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸகோபாலாசாரியர், ஸ்ரீ ஸ்வர்ணம், ஸ்ரீநிவாஸாசாரியர் முதலியவர்கள் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று ச்ரவணத்வாதசி (9-3-56) யன்றும் மறுநாளும் ஆராதித்தார்கள். 9—3—56 அன்று டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள்.

(இதற்கு முன்பு நந்தன வருஷத்தில் இந்த மாதிரி ச்ரவணத்வாதசி வந்திருக்கிறது.) 10வ ராத்திரி புறப்பட்டு ஒரகடம் எழுந்தருளினர். 11-3-56 அன்று ஒரகடத்தில் ஸ்ரீஸந்நிதியிலேயே பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ சடகோபாச்சாரியர் அவர் குமாரர் ஸ்ரீ சேஷாசாரியர் ஸ்ரீ வீரராகவாசாரியர் இவர்கள் ஆராதித்தார்கள். இங்கு ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீ ஸந்நிதி ஆதினத்தைச் சேர்ந்தது. அதில் செய்யவேண்டிய ஜீர்ணோத்தாரணங்களைக் கடாக்ஷித்தாயிற்று. அன்றிரவு புறப்பட்டு திருக்கடன்மல்லைக்கு எழுந்தருளியாயிற்று. தேவஸ்தான அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கர் தலசயனத்தெம்பெருமானை மங்களாசாஸனம் செய்யத் தாங்கள் வேண்டிய ஏற்பாடுகளைச்செய்வதாயும் கடலாடி கடல்மல்லை யெம்பெருமானை மங்களாசாஸனம் செய்யவேணுமென்றும் பிரார்த்தித்தபடி அபிகமநாராதனத்தை முடித்துவிட்டு ஸமுத்திரத்திற்கு எழுந்தருளினர். திங்கட்கிழமை, அமாவாஸ்யை, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருப்பது இதுகளை உத்தேசித்தும் ஸ்ரீ அழகியசிங்கருடன்ஸமுத்திரஸ்நானம் அதிலும் ஸமுத்ரஸ்நானம் கிடைப்பதை உத்தேசித்தும் விஷயம் தெரிந்தவர்கள் அனேகபேர்கள் வந்திருந்தார்கள். ஸமுத்திரஸ்நானமான பிறகு அங்கிருந்து ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. கோயில் துறையாரும் ஸ்ரீ திருவுள்ளமுகக்கும்படி எல்லாக்காரியங்களும் நடந்திருப்பதாக விஜ்ஞாபித்து வழக்கப்படி கோபுரவாசலில் ஸ்ரீசடாரி மரியாதையுடன் வந்து எழுந்தருளப்பண்ணிக் கொண்டுபோய் மங்களாசாஸனம் யதாக்ரமம் பண்ணிவைத்தார்கள். மத்தியானம் ஜ்ஞானப்பிரான் ஸந்நிதிக்கும் எழுந்தருளியாயிற்று. அன்றிரவு புறப்பட்டு மறுபடியும் ஒரகடம் எழுந்தருளினர். 13-3-56 ஊராரெல்லாரும் சேர்ந்து ஆராதித்தார்கள். ஸ்ரீ பட்டாபிராமனுக்கு வீதி உத்ஸவமும் பண்ணி வைத்தார்கள். அங்கிருந்து நெமிலி செங்கல்பட்டு, புலிப்பாக்கம், வடக்குப்பட்டு, ஸ்ரீ பெரும்பூதூர் எழுந்தருளி திருவுள்ளூருக்கெழுந்தருளியாகிறது.

(தொடரும்)

பக்ஷிண்யாசௌசவிஷய ஸம்சயம்

ஒருஸ்வாமிக்கு பக்ஷிண்யாசௌச நிமித்தம் ஒருநாளிரவு 4 மணிக்கு ஸம்பவித்தது. (அதாவது 4 மணிக்கு ஒருவர் பரமபதித்ததால் ஏற்பட்டது.) முதலில் கூறப்பட்ட ஸ்வாமிக்கு ஆசௌசநிவ்ருத்தி எப்பொழுது?

[குறிப்பு:— இவ்விஷயத்தில் ஸம்பவம் நடந்தகாலத்தைப் பார்த்தால் ஸந்தேஹம் ஏற்படவே காரணமிருப்பதாகத் தோன்றவில்லை. ஆயினும் ஸந்தேஹம் ஒருஸ்வாமிக்கு ஏற்பட்டு அதைத் தெரிவித்திருப்பதால் பண்டிதோத்தமர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். அடுத்த ஸஞ்சிகையில் இதன் பதில் வெளியிடப்படும்.]

ஸம்பாதகர்

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[மன்மத ௵ உத்தராயணம் சிசிர ருது - மீன ௴ **1956** மார்ச் - ஏப்ரல்]

14-3-56	பங்குனி ௴ *1*௳	புதன்கிழமை	சூன்ய திதி.
17-3-56	*4*௳	சனிக்கிழமை	பஞ்சமி - ஷஷ்டி திதித்வயம்.
22-3-56	*9*௳	வியாழக்கிழமை	ஏகாதசி.
23-3-56	*10*௳	வெள்ளிக்கிழமை	த்வாதசி; ஹரிவாஸரம் *2-16*.
26-3-56	*13*௳	திங்கட்கிழமை	○பூர்ணிமை. பங்குனி உத்திரம்.
7-4-56	*25*௳	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; த்வாதசிதிதி.
10-4-56	*28*௳	செவ்வாய்க்கிழமை	●அமாவாஸ்யை.
12-4-56	*30*௳	வியாழக்கிழமை	மீனசுக்லத்விதீயைதிதி; மேஷரவி*60-0*; யுகாதிப் [பண்டிகை.

துர்முகி ௵ [உத்தராயணம் - வஸந்த ருது - மேஷ ௴]

13-4-56	சித்திரை ௴ *1*௳	வெள்ளிக்கிழமை	விஷுபுண்யகாலம்; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்யதிதி; வருஷப்பிறப்பு.
14-4-56	*2*௳	சனிக்கிழமை	சூன்யதிதி.
16-4-56	*4*௳	திங்கட்கிழமை	திருவாதிரை; எம்பெருமானார்திருநக்ஷத்ரம். திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் சைத்ர ப்ரஹ்மோத்ஸவத்வஜாரோஹணம்.
18-4-56	*6*௳	புதன்கிழமை	ஸ்ரீ வீரராகவன் கருடோத்ஸவம்.
19-4-56	*7*௳	வியாழக்கிழமை	நவமி - தசமி திதித்வயம்; ஸ்ரீராமநவமி.
20-4-56	*8*௳	வெள்ளிக்கிழமை	ஏகாதசி திதி.
21-4-56	*9*௳	சனிக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
22-4-56	*10*௳	ஞாயிற்றுக்கிழமை	திருவள்ளூர் வீரராகவன் திருத்தேர்.
24-4-56	*12*௳	செவ்வாய்க்கிழமை	○பூர்ணிமை; சித்திரை; மதுரகவியாழ்வார் திரு[நக்ஷத்ரம்.
25-4-56	*13*௳	புதன்கிழமை	திருவள்ளூர் ஸ்ரீவீரராகவன் கண்ணாடிப்பல்லக்கு.
29-4-56	*17*௳	ஞாயிற்றுக்கிழமை	பஞ்சமிதிதி.
30-4-56	*18*௳	திங்கட்கிழமை	அதிதி.

ஸ்ரீ:

சீவரமலையில் சிங்கவேழ்குன்றத்தான்

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் இப்போது செய்தருளும் ஸஞ்சாரத்தில் இதற்குமுன் எழுந்தருளினதாக ஏற்படாத அக்ரஹாரங்களுக்கும் எழுந்தருளி 60- 70 வருஷங்களான அக்ரஹாரங்களுக்கும் கொஞ்சமும் ச்ரமத்தைப் பாராமல் எழுந்தருளுகிறார். ‘தட்டாமாலை’ சுற்றுகிறார் என்றுகூடச் சொல்லலாம். ஸஞ்சாரத்தில் பெருமாளுக்கு இப்போதிருக்கும் உத்ஸாஹத்தை ‘தென்னவென்னு மென்னம்மான் திருச் சிங்கவேழ் மலையானே’ என்று அநுஸந்திக்கும்படியிருக்கிறது.

காஞ்சீபுரம் ஸமீபமுள்ள களக்காட்டூர் அக்ரஹாரத்திற்கு 4-3-56-ல் பெருமாள் எழுந்தருளினார். அவ்வூருக்குப் பெருமாள் எழுந்தருளி 50-வருஷங்களுக்குமேலாகியிருக்கலாம். அதுவும் நிச்சயமாகச் சொல்லமுடியாது என்று சொன்னார்கள். 5-3-56 தினம் அவ்வூரார் ஆராதித்தார்கள். அன்றுராத்ரி அங்கிருந்து புறப்பட்டு சீவரம் எழுந்தருளினார். இந்த ஊருக்கும் 70-வருஷங்களுக்குமுன் பெருமாள் எழுந்தருளியிருக்கலாம் என்று வ்ருத்தர்கள் சொல்லிக் கேள்வியாம். பெருமாள் எழுந்தருளும்போது விடியற்காலை 4- மணியிருக்கும். பின் நிலவுக்காலம். ஸ்ரீ தேவப்பெருமாளை எதிர்கொண்டழைக்குமிடத்தில் ஊரார் த்வாதசோர்த்வபுண்ட்ரத்துடன் பூர்ணகும்பம் வாத்யம் விளக்கு மத்தாப்புடன் காத்திருந்து வீதிகள்வழியேஎழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் சீவரம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணினார்கள். பர்மாஷெல் கம்பெனியைச்சேர்ந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யர் ஆராதித்தார். அன்று 10 மணிக்கு அபிகமன ஆராதனம் முடிந்ததும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீநிவாஸஐயங்காரைக் கூப்பிட்டு ‘பெருமாள் சீவரத்தின் மலைமேல் ஏறி பாரிவேட்டை உத்ஸவம் கண்டருளத் திருவுள்ளம்பற்றுகிறார்; நடத்திவைக்கமுடியுமா’ என்றுகேட்டாயிற்று. அப்படியே செய்வதாய் விஜ்ஞாபித்தார். திருமுக்கூடலுக்கு எழுந்தருளலாமே யென்ற அடியேன் ப்ரார்த்தனையை பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று ஸாதித்துவிட்டு ‘தலைமேல் புனைந்தேன்’ என்ற பாசுரத்தைச் சொல்லும்படி நியமித்தாயிற்று. அடியேனும் சொன்னேன். அப் பாசுரம் வருமாறு—

‘தலைமேல் புனைந்தேன் சரணங்கள் – ஆலின்
இலைமேல் துயின்றா னிமையோர் வணங்க
மலைமேல்தான் நின்றென் மனத்துளிருந்தானை
நிலைபேர்க்கலாகாமை நிச்சித்திருந்தேனே.’

ஸ்ரீ ஸன்னிதியில் ஆராதனம் முடிந்ததும், அதாவது – சாற்றுமுறையானதும் பெருமாள் திருவடியைத் தொட்டு சிரஸ்ஸில் வைத்துக்கொள்ளும்பாவனையாக மெல்ல திருவடியை ஸ்பர்சிப்பது வழக்கம். அந்த அவஸரத்தில்தான் இந்தப் பாசுரத்தையும் தோன்றப் பண்ணி நியமித்தாக ஸாதித்து, பாசுரத்திற்குத் தாம் கொண்ட அர்த்தத்தையும் ஸாதித்தாயிற்று. ‘சரணங்கள் தலைமேல் புனைந்தேன் ஆலின் இலைமேல் துயின்றான் இமையோர் வணங்க’ என்றதினால் அகடிதகடனாஸாமர்த்யம் விவக்ஷிதம். வடபத்ரஶாயித்வம் உபலக்ஷணம். நரங்கலந்த சிங்கவுருவும் அதில் விவக்ஷிதம். சேராச்சேர்த்தியல்லவோ அது! கோபமும் அருளும் ஒரேமுகத்தில் இரு கண்களில் காணும்படி அமைந்த உருவமல்லவா? அந்த பெருமாள் மலைமேல் தான் நின்று அந்த நிலை என்மனத்துள் தோன்றும்படி என்மனத்துளிருந்தானை- நிலைபேர்க்கலாகாமை அதையெல்லாம் நம் கண்ணால் காணும்படி செய்ய வேணுமென்ற திருவுள்ளத்தால் நிலைபேர்க்கலாகாமை ஏற்பட்டது. நிச்சயித்திருந்தேன்; அப்படியே நிச்சயம் நடக்கும் என்றிருந்தேன்’ என்று ஸங்க்ரஹமாக ஸாதித்தாயிற்று. அத்துடன் ‘ஹே ஶ்ரீ நரஸிம்ஹ ஹா நாமயி ஜகூஷ்வ’ என்றதையும், ‘வ்யாக்ருதே:

வடிவாஶ்ரிதஸ்ய’ என்றதையும் காட்டி இமையோர் வணங்க என்பதையும் காட்டி ந்ருஸிம்ஹகுஹையையடைந்த தேவாதிராஜன் எழுந்தருளுகிற சீவரமலை மண்டபத்திற்கு அகடிதகடனையை நேரே காட்டிக்கொண்டிருக்கிற ஸாக்ஷாத் ந்ருஸிம்ஹன் எழுந்தருள- அதுவும் அந்தியம்போதில் மலைமுழஞ்சுக்கு எழுந்தருளத் திருவுள்ளங்கொண்டிருக்கிறான் என்று ஸாதித்தாயிற்று. அதை வைத்துக்கொண்டு இப்பாசுரத்தை அடிக்கடி அநுஸந்தித்துப் பார்க்குங்கால் அது எப்படிப்பொருந்தியிருக்கிறது என்பதைப் பார்த்து அகமகிழ்ந்தேன். மலைமேல் மண்டபத்திற்குப் பந்தல் முதலியன போடுவதற்கு எற்பாடு செய்தார்கள்.

மலையடிவாரத்தில்உள்ள லக்ஷ்மீநரஸிம்மனை மங்களாசாஸனம் செய்யவேணும் என்றும் முன்னமே திருவுள்ளத்தைத் தெரிந்துகொண்டு திருவுள்ளமுகக்கும்படி எற்பாடு செய்திருப்பதாயும் விக்ஞாபித்தார்கள். இஜ்யாராதனம் ஆனதும் பெருமாளைத் தங்கப் பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிவிட்டார்கள். லக்ஷ்மீநரஸிம்ஹன் ஸன்னிதிகார்யங்களைப் பார்க்கிற சண்ணப்பிள்ளை என்பவரும் ஊராரும் 4 மணிக்கு மலைக்கு எழுந்தருளலாமென்றுப்ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் பெருமாளுடன் புறப்பட்டு மலைக்குஎழுந்தருளினர். மலையடிவாரத்தில்ஸ்ரீசடாரிமரியாதைபந்தது. அதைப்பெற்றுக்கொண்டு ஸன்னிதிக்கு எழுந்தருளி வாஹநமண்டபத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணிவிட்டு மங்களாசாஸனத்துக்கு எழுந்தருளியாயிற்று. பெருமாள் லக்ஷ்மீநரசிம்ஹனுக்கு மூலவர்மாதிரியாகவே தாயார் இடது கையில் பத்மத்துடன் வலதுகையால் ஆலிங்கநம் பண்ணிக்கொண்டு மடியில் எழுந்தருளி திருவடிகளிரண்டையும் தொங்கவிட்டுக்கொண்டுஎழுந்தருளியிருந்தார். தனிக்கோயில் நாச்சியாருக்கு அஹோபிலவல்லீஎன்று திருநாமம் என்று சொன்னார்கள். மங்களாசாஸநம் யதாக்ரமம் நடந்தது. கோயில் பக்கத்தில் உள்ளபுஷ்கரிணியில்நீராட்டம்செய்துகொண்டு பெருமாளுடன்மலைமேல்எழுந்தருளியாயிற்று. தேவப்பெருமாள் மலைமேலிருந்து இறங்கும் காலத்தில் பெருமாள் தங்கப்பல்லக்கில் மலைமேல் எறினர். அங்கு மண்டபத்தில் தங்கப் பல்லக்கிலேயே எழுந்தருளியிருந்து பானகாராதனம், ஸேவை, பாராயணம், ராத்திரி ஆராதனம், சாற்றுமுறை, கோஷ்டிவினியோகம் நடந்தது. அநேகம்பேர் வந்து ஸேவித்தார்கள். ஸேவை பாராயணம் சாற்றுமுறை நடந்ததைக் கூடயிருந்து அநுபவித்தவர்கள் இவ்வுத்ஸவத்தில் இது ஒரு எற்றம் என்று சொல்லிக்கொண்டார்கள். அங்கிருந்து வாத்யம் மத்தாப்பு குடைகளுடன் கீழே யிறங்கி வீதிவழியாக ஸ்ரீநிவாஸ ஐயங்கார் க்ருஹத்திற்கு எழுந்தருளி டோலோத்ஸவமாகி செங்கல்பட்டிற் கெழுந்தருளினர்.

இந்த உத்ஸவம் நடந்ததைக்கேட்டு முன்னமேயே தெரிந்திருந்தால் நாங்களும் வந்திருப்போமே; கிடைக்கவில்லையே என்று பலர் குறைபட்டார்கள். கூட யிருந்தவர்களுக்கும் அவ்வூர்வாஸிகளுக்கும் அக்கோயில் டிரஸ்டி ஸாவுக்கார்களுக்குப் இருந்த ஸந்தோஷம் அளவிடமுடியாதது. இது ஒரு அபூர்வமான உத்ஸவம். இதை பெருமாள் கண்டருளத் திருவுள்ளப்பற்றி ஸ்ரீ அழகியசிங்கருக்கு நியமனமானதும் அதுநடந்ததையும் நின்றுநினைக்குங்கால் ‘தஸ்யஸம்ஸ்ப்ருஹதஸ்யஸம்ஸ்ப்ருஹ’ என்றநிலை எற்படுகிறது.

ஸ்ரீ:

கீழ்க்கண்ட புஸ்தகங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

1.	அதிகரணஸாராவளி (சிந்தாமணி கல்பதரு வ்யாக்யானங்களுடன் கூடியது)	ரூ. 7—0—0
	ஷ பைண்ட் செய்யாதது	5—0—0
2.	விசிஷ்டாத்வைதவேதாந்தகோசம் (அகாதி)	20—0—0
3.	ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் (முதல் பாகம்) (ஸ்ரீ ஸாரபோதினீவ்யாக்யானத்துடன் கூடியது } காலிகோபைண்ட்	6—8—0
	பாதி காலிகோ	6—0—0
	ராப்பர் பைண்ட்	5—8—0
	(ஷ புஸ்தகம் இரண்டாவதுபாகமும் இதேவிலை விகிதத்தில் கிடைக்கும்)	
4.	சாற்றுமுறைக்ரமம்	0-12—0
5.	யஜுஸ்ஸந்த்யாவந்தனபாஷ்யம்	0-12—0
6.	ஸ்ரீ ஸந்நிதி நித்யாநுஸந்தானக்ரமம் (கோயில் திருவாய்மொழி, ராமாநுஜநூற்றந்தாதிகளுடன் கூடிய இரண்டாம் பதிப்பு)	0-10—0
	ஷ பபிண்டுசெய்தது	0-12—0
7.	ஸ்ரீ அஹோபிலமடமும் ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரமும் (சித்திரங்களுடன் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் கிடைக்கும்)	0—2—0
8.	ஸ்ரீ ஸந்நிதி தனியன்கள்	0—3—0
9.	வைபவஸுதா (42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திவ்யசரிதம்)	1—4—0
10.	கைசிகமாஹாத்ம்யம் (பட்டர் வ்யாக்யானத்துடன் கூடியது)	0—5—0

வி. பி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. (போஸ்டேஜ், பாக்கிங் செலவு தனி)

அட்டையில் அச்சிட 'திருநாராயணன் ப்ளாக்கை'க் கொடுத்துதவிய 'பக்தன்' ஆசிரியருக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஸ்ரீ:

வைத்திய ரத்னம் பண்டித மே. துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி.

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களால்

ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட

இரண்டு வெகு இரஸமான பிராசீன காவ்யங்கள்

ஹம்ஸ ஸந்தேசம்

ஸ்ரீவேதாந்ததேசிகன் அருளிச்செய்த

ஸம்ஸ்கிருத மூலமும்

அதன் எளிய தமிழ் மொழிபெயர்ப்பும்

பத்தியங்களுடைய அழகும், பொருட்களின் சுவையும், வர்ணனைகளின் சீர்மையும், அலங்காரங்களின் அருங்குணமும் சிறிதும் மாறுபடாது தமிழ் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

ஸ்ரீராமன் ஸீதாப்பிராட்டிக்கு ஓர் அன்னப்பறவையைக்கொண்டு கற்பனைவிசேஷமாய் தூது அனுப்பும் வெகு சுவை பொருந்திய கட்டுரையே இந்நூலின் முக்கிய விஷயம்.

வேதாந்ததேசிகனின் அற்புதமான வாக்கும், அர்த்தபுஷ்டியுள்ள வர்ணனைகளும், அவரது உல்லேகங்களுக்குள்ள உயர்வும், மற்றும் காவ்யச் சிறப்பும் ஸம்ஸ்கிருதம் அறியாதவர்களாலும் அறிந்து அநுபவிக்கப்படவேண்டும் என்றிம்மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது.

தமிழில் அவசியமான உரையும், விமர்சபூர்வகமான விரிவான முகவுரையும் அடங்கியுள்ளது.

விலை ரூபாய் **1-0-0**

வி. பி. பி. சார்ஜ் **0-11-0**

இரண்டு மூன்று புஸ்தகங்களுக்கு வி. பி. பி. செல்வு குறையும்.

காதம்பரி

பட்டபாணன் என்னும் மஹாகவி சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன் இயற்றிய மிகப் பிரபலமான அரிய ஸம்ஸ்கிருத வசந காவ்யத்தின் சுருக்கமான அழகிய தமிழ் மொழி பெயர்ப்பு.

நேர்த்தியான மொழிபெயர்ப்பின் பெருமையை காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாத அய்யர் போன்ற மஹாவித்வான்களும், படித்தறிந்த தென்னாட்டுப்பெண்மணிகளும் மிகப்புகழ்ந்திருக்கிறார்கள்

கதையின் வரலாறு வெகு விசித்ரமானது. பண்டைகாலத்திய இந்திய நாகரிகத்தைப் பல அத்தாட்சிகளுடன் விளக்குவது. "காதம்பரியைப் படித்துவரும்போது இரஸிகருக்கு உணவருந்தவும் மனம் செல்லாது" என்று ஸம்ஸ்கிருதமறிந்தவர் வழங்குவர்.

பல ஆராய்ச்சிகளடங்கிய முகவுரைகளும், கதையில் குறிக்கப்படும் உபகதைகளை விளக்கும் அநுபந்தமும், காதம்பரியின் இரஸ விசேஷங்களையும் உபயோகங்களையும் விவரிக்கும் பல வேறு விஷயங்களுமுண்டு.

விலை ரூபாய் **2-0-0**

தபால் சேலவு **0-12-0**

இரண்டு மூன்று புஸ்தகங்களுக்கு வி. பி. பி. செலவு குறையும்.

(**குறிப்பு:—** ஹம்ஸஸந்தேசம் காதம்பரி இரண்டையும் ஒரே தடவையில் வரவழைத்தாலும் தபால் சேலவு குறையும்.)

இப்புத்தகங்கள் கிடைக்குமிடம்:— **"வைத்திய கலாநிதி" ஆபீஸ், 7 A. ஆரம்ஸ் ரோட், கீழ்பாக்கம், மதராஸ் 10.**

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீஸாரபோதிநீ

(இரண்டாவது பாகம்)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸாரபோதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீஅஹோபிலமடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீஸ்ரீரங்கசடகோப யதீந்த்ர மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். ஸித்தோபாயசோதநாதிகாரம் முதற்கொண்டு நிகமநாதிகாரபர்யந்தமான இந்த இரண்டாவது பாகம் மன்மத வருஷம் தை மாதம் உத்திராடத்திருநன்னுளில் வெளியாகியிருக்கிறது. இந்த பாகமும் உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டிருக்கிறது.

இதன் விலை வருமாறு:—

(Full)	புல் காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-8-0
(Half)	ஆப்காலிகோ பயிண்டு புத்தகம்	ரூபாய்	6-0-0
(Wrapper)	ராப்பர் பயிண்டு புத்தகம்	ரூபாய்	5-8-0

புஸ்தகத்தை அபேக்ஷிக்கும் ஆஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவரபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர். (செங்கல்பட்டு ஜில்லா)

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிட்டே அனுப்பவேண்டும். புத்தகம் வேண்டியவர்கள் அதன் விலையில் பாதியையாவது முன்பணமாக அனுப்பினுல் வி. பி. பி. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.